48

# அனுபவ இலக்கணம்
# மொழிப் பயிற்சியுடன்

இரண்டாம் புத்தகம்

(இரண்டாம் அமைப்புக்குரியது)

வட ஆர்க்காடு ஜில்லா
லேபர் பாடசாலைகளின் மாஜி மேற்பார்வையாளன்
**D. சௌந்தரராஜன்**
இயற்றியது

...மாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ்
...னதம்பித் தெரு, சென்னை
1950

[விலை 13 அணா

TB
P31(7)
N50
131159.

# அனுபவ இலக்கணம்
## மொழிப் பயிற்சியுடன்

இரண்டாம் புத்தகம்

(இரண்டாம் அமைப்புக்குரியது)

வட ஆர்க்காடு ஜில்லா
லேபர் பாடசாலைகளின் மாஜி மேற்பார்வையாளன்
D. சௌந்தரராஜன்
இயற்றியது

ஸி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ்
34, சின்னதம்பித் தெரு, சென்னை
1950

[ரெஜிஸ்தர் செய்தது] [விலை 13 அணா]

Printed at
The 'Caxton Press,
Madras.

# முன்னுரை

மாணவர் தம் கருத்துக்களைப் பிறர் அறியும் வண்ணம் பிழையறத் தெளிவுறப் பேசவும் எழுதவும் அறிதல் மொழி கற்பதன் தலை நோக்கங்களில் ஒன்றாகும். இந் நோக்கத்தை நிறைவேற்ற இலக்கணவறிவு தேவை.

முற்காலத்தில் இலக்கணம் கற்பித்த முறை மனோ பாவத்துக்கு அடுத்ததன்று. முதலில் விதியைக் கூறிப் பிறகு அதற்கேற்ற உதாரணங்களைக் கூறுதலினால் மாண வர்க்கு இலக்கணவறிவு உபயோகிக்கக் கூடியவகையில் அமைவதில்லை; நவீன முறைகளின்படி ஒற்றுமையுடைய மொழிகளை அணிவகுத்துக்காட்டி, அவற்றால் பெறப் படும் இலக்கண விதிகளை அவர்களையே யூகித்தறியச் செய்து, அங்ஙனம் அடைந்த இலக்கணவறிவை உபயோ கிக்கப் பழக்குவதால், அவர்களுக்கு இலக்கணத்தில் மிக்க ஊக்கமும் தேர்ச்சியுமுண்டாவதுடன் மொழிகளைத் தக்க வாறு வழங்கும் ஆற்றலும் விளைகின்றது. இதையே பவணந்தி முனிவர் 'இலக்கியங் கண்டதன் இலக்கணம் இயம்பல்' என்றார்.

மொழிப்பயிற்சி இலக்கணத்துக்கு அனுசரணையாகக் கருத்துக்கேற்ப, தனிற்சொற்றொடர் தொடுக்கவும் சொற் றொடர் கோவை தொடுக்கவும் பயிற்சி தரும் மேனாட்டு முற்போக்குள்ள போதனா முறையாசிரியர்கள் தத்தம மொழிகளில் இயற்றியுள்ள மொழிப்பயிற்சி நூல்களைத் தழுவி ஈண்டும் பயிற்சிகள் ஆக்கப்பட்டுள்ளன.

போதிய இடமின்மையால் பயிற்சிகள் சிலவே ஈண்டு தரப்பட்டிருப்பினும், உபாத்திமார் அம்மாதிரிகளில் பல பயிற்சிகளைத் தாமே தயாரித்து வகுப்பில் உபயோகிப்பின் நற்பயனுண்டாம்.

D. S.

# பொருளடக்கம்

## அனுபவ இலக்கணம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| I. | எழுத்து | 1 |
| (1) | சுட்டெழுத்து | ,, |
| (2) | வினவெழுத்து | 2 |
| (3) | மாத்திரை | 4 |
| (4) | குற்றியலுகரம் | 7 |
| (5) | குற்றியலிகரம் | 10 |
| II. | சொல் | 11 |
| (1) | பெயர்ச்சொல் | ,, |
| (2) | ஆகுபெயர் | 16 |
| (3) | வினையாலணையும் பெயர் | 19 |
| (4) | பால் | 20 |
| (5) | எண் | 24 |
| (6) | வேற்றுமை | 26 |
| (7) | வினைச்சொல் | 43 |
| (8) | எச்சங்கள் | 47 |
| III. | வாக்கியம் | 49 |
| (1) | பகுப்பு | ,, |
| (2) | சொல்லிலக்கணம் | 56 |
| IV. | புணர்ச்சி | 60 |


## மொழிப் பயிற்சி


| | | |
|---|---|---|
| I. | வாக்கிய வகை | 67 |
| II. | வாக்கிய மாற்றம் - I | 71 |
| III. | வழுச்சொற்களும் திருத்தமும் | 73 |
| IV | சொற்பொருத்தம் | 86 |
| V. | நிறுத்துக் குறிகள் | 95 |
| VI. | வாக்கியப் பிழைகளும் திருத்தமும் | 100 |
| VII. | வல்லெழுத்து மிகும் இடங்கள், மிகா இடங்கள் | 104 |
| VIII. | வாக்கிய மாற்றம் - II | 114 |
| IX. | கட்டுரை | 118 |

# அனுபவ இலக்கணம்

இரண்டாம் அமைப்பு

## I. எழுத்து

**1.** ஒலியின் வரிவடிவே எழுத்து ஆகும். அது எழுதப்படுவதால் எழுத்து எனப்படும்.

**2.** தமிழ்ப் பாஷையின் எழுத்துக்கள் நான்கு வகைப்படும் :

(1) உயிரேழுத்து (3) உயிர்மெய்யெழுத்து
(2) மேய்யெழுத்து (4) ஆய்தவெழுத்து

**3.** உயிரெழுத்துக்களில் சில மொழிகளில் வரும் போது தாமாகவே சுட்டு அல்லது வினப்பொருளை உணர்த்தும் தன்மையுடையவை.

### 1. சுட்டெழுத்து

**1.** அடியிற் கண்ட வார்த்தைகளில் முதல் எழுத்துக்களின் பொருளைக் கவனி :

| முதல் வரிசை | இரண்டாம் வரிசை | மூன்றும் வரிசை |
|---|---|---|
| அப்பன் | அவ்வீடு | அவன் |
| இலே | இக்குடை | இவன் |
| அரசன் | அக்காய் | அது |
| இலங்கை | இப்பழம் | இது |

முதல் வரிசையிலுள்ள மொழிகளின் முதலிலுள்ள எழுத்துக்கள் அம் மொழிகளிலேயே சம்பந்தப்பட்டு உள்ளன.

இரண்டாம் வரிசையிலுள்ள மொழிகளின் முதலிலுள்ள எழுத்துக்கள் தனியே பொருளையுடையன. அவை சுட்டிக் காட்டுகின்றன. அவ்விதமே மூன்றும் வரிசையிலுள்ள மொழிகளின் முதலிலுள்ள எழுத்துக்களும் சுட்டிக் காட்டுகின்றன. அவை சுட்டிக் காட்டுவதால் அவற்றிற்குச் சுட்டெழுத்துக்கள் என்பது பெயர்.

இரண்டாம் வரிசையிலுள்ள சுட்டெழுத்துக்கள் மொழிகளுக்குப் புறத்தே அல்லது வெளியே இருந்து சுட்டிக் காட்டுவதால் அவற்றிற்குப் புறச்சுட்டு என்பது பெயர்.

மூன்றும் வரிசையிலுள்ள சுட்டெழுத்துக்கள் மொழிகளின் உள்ளிருந்தே சுட்டிக் காட்டுவதால் அவற்றிற்கு அகச்சுட்டு என்பது பெயர்.

‘அ, இ’ என்னும் சுட்டெழுத்துக்கள் ‘அந்த, இந்த’ எனவும் வரும். உகரமும் சுட்டுப் பொருள்களில் வந்தால் சுட்டெழுத்தாகும். அது அரிதாக வரும்.

## 2. வினாவெழுத்து

**1.** அடியிற் கண்ட வார்த்தைகளில் தடித்த எழுத்துக்களைக் கவனி :

| முதல் வரிசை | இரண்டாம் வரிசை | மூன்றாம் வரிசை |
|---|---|---|
| எழுத்து | எது ? | —— |
| ஏர் | ஏன் ? | —— |
| யான் | யார் ? | —— |

| | | |
|---|---|---|
| முருகா | —— | முருகனா? |
| போ | —— | உப்போ? |

முதல் வரிசை மொழிகளின் தடித்த எழுத்துக்களுக்குக் கேள்வி கேட்கும் தன்மையில்லை.

இரண்டாம் வரிசையின் முதலிலுள்ள எழுத்துக்களுக்குக் கேள்வி கேட்கும் தன்மை இருக்கிறது.

மூன்றும் வரிசையிலுள்ள மொழிகளின் கடைசியிலுள்ள எழுத்துக்களுக்கும் கேள்வி கேட்கும் தன்மை இருக்கிறது.

வினாப்பொருள் தரும் இவ்வெழுத்துக்களுக்கு வினா வெழுத்துக்கள் என்பது பெயர்.

'எ, யா, ஏ' எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வந்து வினாப் பொருளைத் தந்தால் வினா வெழுத்துக்களாகும். 'ஆ, ஓ' மொழிக்குக் கடைசியில் வந்து வினாப்பொருளைத் தந்தால் வினாவெழுத்துக்களாகும்.

**2. கீழ்க்கண்ட மொழிகளில் வினாவெழுத்தின் தன்மை நோக்குக :**

| முதல் வரிசை | இரண்டாம் வரிசை |
|---|---|
| எவன்? | எப்பையன்? |
| எது? | எம்மாடு? |
| என்ன? | எக்காய்? |

முதல் வரிசையில் வினாவெழுத்துக்கள் மொழிகளுக்குள்ளேயே இருப்பதால் அவை அகவினா.

இரண்டாம் வரிசையில் வினாவெழுத்துக்கள் மொழிகளுக்கு வெளியில் இருப்பதால் அவை புறவினா.

3. அடியிற் கண்ட மொழிகளில் வினவெழுத்துக்களையும் சுட்டெழுத்துக்களையும் காட்டுக. அகமா, புறமா என்றும் கூறுக:

| | | |
|---|---|---|
| 1. அக்காடு | 8. இடையன் | 15. நானே |
| 2. அக்காள் | 9. எது | 16. அடை |
| 3. யானை | 10. யாவன் | 17. அப்பனை |
| 4. இனிமை | 11. ஏப்பம் | 18. எவர் |
| 5. எப்பாய் | 12. அவள் | 19. உம்பர் |
| 6. இவர் | 13. இம்மரம் | 20. உடை |
| 7. எள் | 14. அப்பா | 21. உலகம் |

## 3. மாத்திரை

1. அடியிற் கண்ட எழுத்துக்களில் எவற்றிற்கு அதிக ஓசை? எவற்றிற்கு ஓசை குறைவு?

| முதல் வரிசை | இரண்டாம் வரிசை | மூன்றாம் வரிசை |
|---|---|---|
| க், ங், ச், | அ | ஆ |
| ஞ், ட், ண், | இ | ஈ |
| த், ந், ப், | உ | ஊ |
| ம், ய், ர், | எ | ஏ |
| ல், வ், ழ், | ஒ | ஓ |
| ள், ற், ன். | | ஐ |
| | | ஔ |

முதல் வரிசையிலுள்ள எழுத்துக்களின் ஓசை மிகவும் குறைவு. இரண்டாம் வரிசையிலுள்ள எழுத்துக்களின் ஓசை அதைவிட அதிகம். மூன்றாம் வரிசையிலுள்ள எழுத்துக்களின் ஓசை இன்னும் அதிகம். இந்த ஓசைக்குக் கால அளவு உண்டு.

கைந்நொடிப்பொழுது அல்லது கண்ணிமைப்பொழுதுக்கு ஒரு மாத்திரை என்பது பெயர். இதைக்கொண்டு எழுத்துக்களின் ஓசை அளக்கப்படும்.

இரண்டாம் வரிசையிலுள்ள எழுத்துக்களின் ஓசை தனித்தனி ஒரு மாத்திரை ஆகும். முதல் வரிசையிலுள்ள எழுத்துக்களின் ஓசை தனித்தனி அரை மாத்திரை ஆகும். மூன்றும் வரிசையிலுள்ள எழுத்துக்களின் ஓசை தனித்தனி இரண்டு மாத்திரை ஆகும்.

இதுபோலவே உயிர்மெய்க் குறிலுக்கு ஒரு மாத்திரையும், உயிர்மெய் நெடிலுக்கு இரண்டு மாத்திரையும் ஒலியில் அளவாகும். ஆய்தத்திற்கு ஒரு மாத்திரையாகும்.

**2.** கண்ணிமையால் சில எழுத்துக்களின் மாத்திரையைச் சோதிக்க. சில எழுத்துக்களின் மாத்திரையைக் கைந்நொடியால் பரீட்சித்துப் பார்க்க.

**3.** அடியிற் கண்ட எழுத்துக்களின் மாத்திரையைக் கூறுக :

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ப் | 2. இ | 3. பெ | 4. மோ | 5. மை |
| 6. தி | 7. சு | 8. ஒ | 9. டெ | 10. வூ |

**4.** அடியிற் கண்ட மொழிகளில் தடித்த எழுத்துக்களின் ஒலி அளவு கூறுக. ஒலி நீண்டதற்குக் காரணமும் கூறுக :

1. தயிரோ ஒஒ தயிர்.
2. மசா அஅல் வடை முறுக்கு.

3. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை.

4. குடிதழிஇக் கோலோச்சு மன்னன்
அடிதழீஇ நிற்குமுலகு.

5. இலங்குவெண் பிறைசூடீச னடியார்க்குக்
கலங்கு நெஞ்சமிலைகாண்.

பண்ட மாற்றலினும் (சாமான் விற்றல்) செய்யுளில் ஓசை குறையுமிடத்து அதை நிரப்பவும் எழுத்துக்கள் தமக்கு ஏற்பட்ட மாத்திரையில் நீண்டு ஒலிக்கும். இதற்கு அளபேடை என்பது பெயர். (அளபு+எடை; அளவு அதிகரித்தல்.)

உயிரெழுத்துக்கள் நீண்டு ஒலித்தால் உயிரளபேடை என்பது பெயர். மெய்யெழுத்துக்கள் நீண்டு ஒலித்தால் ஒற்றளபேடை என்பது பெயர். (ஒற்று - மெய்.)

**5. அடியிற் கண்டவை என்ன அளபெடை? அளபெடைக்குக் காரணம் கூறுக:**

1. மாம்பழஅ அம் மாம்பழம்.

2. மடங்ங் கலந்த மனனே கலத்து
விடங்ங்கலந் தானைவேண்டு.

3. உட்கப்படாஅ ரொளி யிழப்பரெஞ் ஞான்றும்
கட்காதல்கொண் டொழுகுவார்.

4. ஓஒதல் வேண்டும்.

5. ஐயப்படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

## 4. குற்றியலுகரம்

1. உகரம் மொழிக்குக் கடைசியில் க, ச, ட, த, ப, ற மெய்களின்மேல் ஏறி வந்தால் சில விடங்களில் தனக்கு ஏற்பட்ட ஒரு மாத்திரையிலும் குறுகி அரை மாத்திரை அளவாய் ஒலிக்கும். அவ்விதம் ஒலிக்கும் உகரத்துக்குக் குற்றியலுகரம் என்பது பெயர்.

2. குற்றியலுகரம் நெட்டெழுத்தையாவது ஒன்றுக்கு மேற்பட்ட குற்றெழுத்துக்களையாவது, மெய் யெழுத்தையாவது, ஆய்தவெழுத்தையாவது சார்ந்து மொழிக்கு இறுதியில் வரும்.

3. கீழ்க்கண்ட உகரங்களில் எவை மொழிகளின் இறுதியில் குற்றியலுகரமாக வரலாம்? எவை வரா? ஏன்?

| | | |
|---|---|---|
| 1. டு | 6. ஙு | 11. ரு |
| 2. மு | 7. கு | 12. பு |
| 3. சு | 8. ஞு | 13. னு |
| 4. ளு | 9. நு | 14. து |
| 5. யு | 10. று | 15. லு |

குற்றியலுகரம் தனிக் குறிலைச் சார்ந்து வராது. எனவே தனிக் குறிலைச் சார்ந்து வரும் கு, சு, டு, து, பு, று உயிர்மெய் எழுத்துக்களில் உள்ள உகரங்களுக்கு முழு மாத்திரையும் உண்டு. அதனல் அவைகள் முற்றியலுகரம் எனப்படும்.

4. அடியிற் கண்ட மொழிகளின் இறுதியிலுள்ள உகரங்கள் ஏன் முற்றியலுகரம்?

| | | |
|---|---|---|
| 1. பசு | 9. பள்ளு | 15. புகு |
| 2. கதவு | 9. படு | 16. புழு |
| 3. அது | 10. சரயு | 17. மரு |
| 4. கணு | 11. வாழ்வு | 18. விடு |
| 5. மடு | 12. முணுமுணு | 19. வெளு |
| 6. வாயு | 13. மது | 20. தடு |
| 7. உறு | 14. தும்மு | 21. கொசு |

5. அடியிற் கண்ட சொற்களில் குற்றியலுகரங்கள் எதைச் சார்ந்து வருகின்றன?

| | | |
|---|---|---|
| 1. பாக்கு | 8. பிஞ்சு | 15. பாம்பு |
| 2. படகு | 9. தராசு | 16. சாயபு |
| 3. குந்து | 10. கன்று | 17. சோறு |
| 4. முறடு | 11. சாது | 18. தவிடு |
| 5. மார்பு | 12. ஆடு | 19. தவறு |
| 6. பாபு | 13. பட்டு | 20. தேடு |
| 7. அஃது | 14. பயறு | 21. விறகு |

6. அடியிற் கண்ட மொழிகளில் எவை குற்றியலுகரமுடையவை? எவை முற்றியலுகரமுடையவை? காரணமும் கூறுக:

| | | |
|---|---|---|
| 1. எஃகு | 8. எழு | 15. தயவு |
| 2. முத்து | 9. கழிவு | 16. குஞ்சு |
| 3. கரு | 10. மிளகு | 17. உழு |
| 4. வயறு | 11. எலும்பு | 18. பேறு |
| 5. உறவு | 12. எருது | 19. உலகு |
| 6. மூச்சு | 13. வடு | 20. வரலாறு |
| 7. நாற்று | 14. சிப்பு | 21. அணங்கு |

7. அடியிற் கண்ட குற்றியலுகர வரிசைகளைக் கவனி. ஈற்றுக் கயலில் என்ன எழுத்துக்கள் வருகின்றன ?

| முதல் வரிசை | 2-ம் வரிசை | 3-ம் வரிசை | 4-ம் வரிசை | 5-ம் வரிசை | 6-ம் வரிசை |
|---|---|---|---|---|---|
| கொக்கு | சங்கு | கொய்து | —— | வயது | பாகு |
| மச்சு | குஞ்சு | சார்பு | எஃகு | படகு | பூசு |
| குட்டு | குண்டு | சால்பு | கஃசு | தரகு | வீடு |
| வாத்து | குந்து | மூழ்கு | எஃகு | கவடு | காது |
| தோப்பு | கும்பு | —— | —— | வல்லுறு | பாபு |
| நாற்று | ஒன்று | —— | —— | அளபு | கூறு |

முதல் வரிசையிலுள்ள மொழிகளில் ஈற்றுக்கு அயலில் வல்லினமெய் இருக்கிறது. அதனுவ் அவை வன்றொடர் குற்றியதுகரங்கள்.

இரண்டாம் வரிசையில் ஈற்றுக்கு அயலெழுத்து மெல்லினமெய். அதனுல் அவை மேன்றொடர் குற்றியலுகரங்கள்.

மூன்ரும் வரிசையில் ஈற்றுக்கு அயலெழுத்து இடையினமெய். அதனுல் அவை இடைத்தொடர் குற்றியலுகரங்கள்.

நான்காம் வரிசையில் ஈற்றுக்கு அயலெழுத்து ஆய்தவெழுத்து. அதனுல் அவை ஆய்தத்தொடர் குற்றியலுகரங்கள்.

ஐந்தாம் வரிசையில் ஈற்றுக்கு அயலெழுத்து உயிரெழுத்து. அதனுல் அவை உயிர்த்தொடர் குற்றியலுகரங்கள்.

ஆறும் வரிசையில் ஈற்றுக்கு அயலெழுத்து ஒரே நெட்டெழுத்து. ஆகையால் அவை நெடிற்றொடர் குற்றியலுகரங்கள்.

8. அடியிற் கண்ட குற்றியலுகரங்கள் இன்ன தொடர் என்று கூறுக:

| | | |
|---|---|---|
| 1. உப்பு | 8. குத்து | 15. சுளுக்கு |
| 2. வரலாறு | 9. தீங்கு | 16. கற்பு |
| 3. துண்டு | 10. மார்பு | 17. உலகு |
| 4. போழ்து | 11. பின்பு | 18. குறடு |
| 5. அஃது | 12. எஃது | 19. பந்து |
| 6. நாடு | 13. நொய்து | 20. மேற்கு |
| 7. ஏற்பாடு | 14. பேசு | 21. விலங்கு |

## 5. குற்றியலிகரம்

குற்றியலுகரத்துடன் யகரம் புணர்ந்தால் உகரம் இகரமாகத் திரியும். இதற்கும் மாத்திரை அரை ஆகையால் இதற்குக் குற்றியலிகரம் என்பது பெயர்.

குருட்டு + யானை : குருட்டி யானை.
தின்பது + யாது : தின்பதி யாது.

# II. சொல்

எழுத்துக்கள் தனித்தாயினும் இரண்டு முதல் தொடர்ந்தாயினும் நின்று, ஒரு பொருளைத் தந்தால் அது சொல் எனப்படும்.

(உ-ம்.) ஆ, கை, நாய், மாடு, செல்.

## 1. பெயர்ச்சொல்

1. அடியிற் கண்ட பெயர்ச்சொற்களின் பொருளைக் கவனி. எப் பெயர்களுக்குக் காரணம் உண்டு? எப் பெயர்களுக்குக் காரணமில்லை?

| முதல் வரிசை | இரண்டாம் வரிசை |
|---|---|
| மரம் | கரியன் |
| நாம் | முக்காலி |
| பூனை | நாட்டுப்புறத்தான் |
| ஆறு | வாணியன் |
| காடு | முறுக்கு |

முதல் வரிசையிலுள்ள சொற்கள் யாதொரு காரணமுமின்றி அப்பொருள்களுக்கு இடப்பட்ட குறியாய் வழங்குகின்றன. அதனால் அவற்றிற்கு இடுகுறிப் பெயர் என்பது பெயர்.

இரண்டாம் வரிசையிலுள்ள சொற்கள் காரணம்பற்றி அப் பொருள்களுக்கு வழங்குவதால் அவற்றிற்குக் காரணப் பெயர் என்பது பெயர்.

2. அடியிற் கண்டவற்றில் எவை இடுகுறிப் பெயர்? எவை காரணப் பெயர்?

| | |
|---|---|
| 1. ஓடுகாலன் | 6. காகம் |
| 2. மண்வெட்டி | 7. வேலன் |
| 3. பெட்டி | 8. பலகை |
| 4. நீலி | 9. குழந்தை |
| 5. கிழவி | 10. காற்ருடி |

3. அடியிற் கண்ட இடுகுறிப்பெயர், காரணப் பெயர்களின் இரு வரிசைகளையும் கவனி:

| இடுகுறிப்பெயர்: | | காரணப்பெயர்: | |
|---|---|---|---|
| முதல் வரிசை | 2-ம் வரிசை | முதல் வரிசை | 2-ம் வரிசை |
| மரம் | தென்னை | அணி | வளையல் |
| ஆறு | கங்கை | பக்ஷணம் | சுண்டல் |
| மலை | சம்பத்கிரி | கோயில் | திருவரங்கம் |
| நகரம் | தஞ்சை | ஊர்வன | கட்செவி |
| மிருகம் | யானை | அமரர் | கணேசன் |

இடுகுறிப்பெயரில் (i) முதல் வரிசையிலுள்ள பெயர்கள் தனித்தனி பலவகைப் பொருள்களுக்கும் காரணமின்றிப் பொதுவாக வருகின்றன. அதனுல் அவற்றிற்கு இடுகுறிப் பொதுப்பெயர் என்பது பெயர்.

(ii) இரண்டாம் வரிசையிலுள்ள பெயர்கள் ஒவ்வொன்றும் ஒருவகைப் பொருள் அல்லது தனிப்பட்ட பொருள்களுக்குக் காரணமின்றி வருவதனுல் அவற்றிற்கு இடுகுறிச் சிறப்புப்பெயர் என்பது பெயர்.

காரணப்பெயரில் (i) முதல் வரிசையிலுள்ள பெயர்கள் தனித்தனிக் காரணம்பற்றிப் பலவகைப் பொருள்களுக்கும் பொதுவாக வருகின்றன. அதனுல் அவற்றிற்குக் காரணப் பொதுப்பெயர் என்பது பெயர்.

(ii) இரண்டாம் வரிசையிலுள்ள பெயர்கள் காரணம் பற்றித் தனித்தனி ஒருவகைப் பொருள் அல்லது தனிப்பட்ட பொருள்களுக்கு வருகின்றன. அதனால் அவற்றிற்குக் காரணச் சிறப்புப்பெயர் என்பது பெயர்.

**4.** அடியிற் கண்ட பெயர்களில் எவை காரணப் பொதுப்பெயர்? எவை காரணச் சிறப்புப்பெயர்? எவை இடுகுறிப் பொதுப்பெயர்? எவை இடுகுறிச் சிறப்புப்பெயர்?

| | |
|---|---|
| 1. தேசம் | 11. பொன் |
| 2. பறவை | 12. கொக்கு |
| 3. சிகரம் | 13. உதகமண்டலம் |
| 4. புல் | 14. சீனு |
| 5. உலோகம் | 15. உடுப்பு |
| 6. இளைஞன் | 16. கோரை |
| 7. இராமன் | 17. மலர் |
| 8. அங்கி | 18. உணவு |
| 9. சோறு | 19. சாதி |
| 10. வாடாமல்லிகை | 20. செம்படவன் |

**5.** அடியிற் கண்ட பெயர்ச்சொற்களின் தன்மையைக் கவனி:

1. மரம், பானை, தேர், குதிரை.
2. ஆறு, ஏரி, காடு, வீடு, தேசம்.
3. புதன், நாள், மாதம், வெள்ளி.
4. கை, கண், அலகு, மூக்கு.
5. வறுமை, செம்மை, தீமை, நன்மை.
6. வருதல், போதல், நடத்தல், புலம்பல்.

7. அவன், இவன், அது, இவர்.
8. எவன், எவள், எது, எவர்.
9. நான், நாம், நாங்கள்.
10. நீ, நீர், நீங்கள்.
11. மூன்று, முழம், படி, பலம்.
12. மாமன், அண்ணன், தம்பி, தங்கை.
13. வண்ணான், இடையன், சேணியன்.

'மரம்' முதலியன பொருள்களை உணர்த்துவதால் பொருட் பெயர்கள்.

'ஆறு' முதலியன இடங்களை உணர்த்துவதால் இடப் பெயர்கள்.

'புதன்' முதலியன காலங்களை உணர்த்துவதால் காலப் பெயர்கள்.

'கை' முதலியன உறுப்புகளை உணர்த்துவதால் சினைப் பெயர்கள்.

'வறுமை' முதலியன குணங்களை உணர்த்துவதால் குணப் பெயர்கள்.

'வருதல்' முதலியன செய்கைகளை உணர்த்துவதால் தொழிற் பெயர்கள்.

'அவன்' முதலியன எதிரில் இருக்கிற அல்லது முன் சொன்ன பொருள்களைக் காட்டுவதால் சுட்டுப் பெயர்கள்.

'எவன்' முதலியன கேள்விப் பொருளில் வருவதால் வினாப் பெயர்கள்.

'நான்' முதலியன தன்னை அல்லது தன்னைச் சேர்ந்தவர்களைக் காட்டுவதால் தன்மைப் பெயர்கள்.

'நீ' முதலியன பேசுகிறவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டு அவன் முன் நிற்கிறவனையாவது, நிற்கிறவர்களையாவது காட்டுவதால் முன்னிலைப் பெயர்கள்.

'மூன்று' முதலியன அளவுகளைக் காட்டுவதால் அளவுப் பெயர்கள்.

'மாமன்' முதலியன உறவைக் காட்டுவதால் கிளைப் பெயர்கள்.

'வண்ணான்' முதலியன சாதியைக் காட்டுவதால் சாதிப் பெயர்கள்.

6. அடியிற் கண்ட பெயர்ச்சொற்கள் இன்ன பெயர்கள் என்று காரணங்களுடன் கூறுக:

| | | |
|---|---|---|
| 1. பிரபவ | 11. பிரிதல் | 21. கரடி |
| 2. ஆப்ரிக்கா | 12. காசி | 22. மயில் |
| 3. திரிதல் | 13. செம்படவன் | 23. காதம் |
| 4. நாங்கள் | 14. யாவர் | 24. மகள் |
| 5. மரக்கால் | 15. நேர்மை | 25. இவை |
| 6. பெங்களூர் | 16. நாவிதன் | 26. கழிவு |
| 7. கருமை | 17. முனியன் | 27. ரூபாய் |
| 8. நாழிகை | 18. மரம் | 28. சாந்தம் |
| 9. பருந்து | 19. மணங்கு | 29. கிழவன் |
| 10. நேசன். | 20. அவன் | 30. பாட்டி |

7. அடியிற் கண்ட சொற்றொடர்களிலுள்ள பெயர்சொற்களின் வகை கூறுக.

(உ-ம்.) நாய் — பொருட் பெயர், இடுகுறி சிறப்புப் பெயர்.

1. வரதன் நீட்டோலை வாசித்தான்.
2. மங்கை மைந்தனைக் கண்டு மகிழ்ந்தனள்.

3. நான் ஒரு விளக்கு வாங்கினேன்.
4. குந்தியும் ஐவரும் வந்தனர்.
5. முனிவர் கால்கழுவி வந்தார்.
6. குள்ளன் நாற்காலி வாங்கினான்.
7. கிழவி சாமந்திமாலை கட்டினாள்.
8. தேசத் தொண்டர் தேசீய கீதம் பாடுகின்றனர்.
9. பலம் மிளகு விலை நான்கு அணா.
10. சிங்கத்துக்கு மிருகேந்திரன் என்பது பெயர்.

8. உன் பாட புத்தகத்திலிருந்து வகைக்குப் பத்து வீதம் பெயர்ச்சொற்களை எடுத்து வரைக.

## 2. ஆகுபெயர்

1. அடியிற் கண்ட சொற்றொடர்களைக் கவனி :

1. வெற்றிலை நட்டான்.
2. ஊர் உறங்கிற்று.
3. கார் அறுத்தான்.
4. சுண்டல் செய்தான்.
5. மூன்று வாங்கினான்.

'வெற்றிலை' என்பது வெற்றிலையையே காட்டாமல் வெற்றிலைக் கொடியைக் காட்டுகிறது.

'ஊர்' என்பது ஊரையே காட்டாமல் ஊரிலுள்ள மக்களைக் காட்டுகிறது.

'கார்' என்பது கார்காலத்தையே காட்டாமல் கார் காலத்தில் ஆகும் பயிரைக்காட்டுகிறது.

'சுண்டல்' என்பது சுண்டும் வேலையைக் காட்டாமல் சுண்டும் பொருளைக் காட்டுகிறது.

'மூன்று' என்பது எண்ணைக் காட்டாமல் அவ்வெண்ணிக்கையுள்ள பொருள்களைக் காட்டுகின்றது.

இவ்விதம் ஒரு பெயர் தான் உணர்த்தவேண்டிய பொருளையே உணர்த்தாமல் அதற்குச் சம்பந்தப்பட்ட வேறு பொருளை உணர்த்துவதற்கு ஆகுபெயர் என்பது பெயர்.

(ஆகும் + பெயர்) ஆகு பெயர். ஒரு பொருளின் பெயர் மற்றொரு பொருளுக்கு ஆவது.

2. அடியிற் கண்ட பெயர்கள் ஏன் ஆகு பெயர்கள்? எதன் பெயர் எதற்கு ஆயிற்று?

1. தாமரை முகம்.
2. வான் மகிழும்.
3. பொழுது சாய்ந்தது.
4. மருக்கொழுந்து நட்டான்.
5. வெள்ளை அடித்தான்.
6. வற்றல் உண்டேன்.
7. வீசை விற்றான்.
8. விளக்கு ஒடிந்தது.
9. திருவள்ளுவர் படி.
10. காலை வந்தான்.

'தாமரை' என்னும் கொடியின்பெயர் அதன் உறுப்பாகிய மலருக்கு ஆயிற்று.

'வான்' என்னும் இடத்தின் பெயர் அங்கு வாழும் தேவர்க்கு ஆயிற்று.

'பொழுது' என்னும் காலத்தின் பெயர் சூரியனுக்கு ஆயிற்று.

'கொழுந்து' என்னும் கிளையின் பெயர் அதனையுடைய செடிக்கு ஆயிற்று.

'வெள்ளை' என்னும் குணப்பெயர் அக்குணமுடைய சுண்ணும்புக்கு ஆயிற்று.

'வற்றல்' என்னும் தொழிற் பெயர் வற்றின பொருளுக்கு ஆயிற்று.

'வீசை' என்னும் அளவுப்பெயர் அவ்வளவுள்ள பொருளுக்கு ஆயிற்று.

'விளக்கு' என்னும் நெருப்புச் சுவாலையின் பெயர் அதன் இடமான தண்டுக்கு ஆயிற்று.

'வள்ளுவர்' என்னும் கருத்தாவின் பெயர் அவரால் செய்யப்பட்ட நூலுக்கு ஆயிற்று.

'காளை' என்னும் உபமானத்தின் பெயர் அது போன்ற மனிதனுக்கு ஆயிற்று.

3. அடியிற் கண்டவற்றில் எவை ஆகுபெயர்கள்? எதன் பெயர் எதற்கு ஆயிற்று?

1. கார்த்திகைப் பண்டிகை.
2. தலைக்கு ஒரு பழம் கொடு.
3. புளி தின்றான்.
4. பொரியல் கொண்டுவா.
5. ஒரு கஜம் விலை கூறு.
6. சிங்கப்பெருமாள் கோயில் ஒரு நகரம்.
7. நக்கீரர் படி.
8. பாவை வருகிறாள்.

9. அவனுக்குப் படிப்பு இல்லை.
10. ஆம்பல் வாய்.
11. பாதம் ஹல்வா.
12. போங்கல் தின்.
13. அழகி வருகிறாள்.
14. செம்பு கொண்டுவா.
15. எனக்கு ஒற்றைத் தலைநோய் எடுக்கிறது.
16. மஞ்சள் வாங்கு.
17. உலகம் அஞ்சும்.
18. சிவப்பு எடுத்து நெற்றியில் இடு.
19. இராமன் கால் உடைந்தது.
20. தேங்காய்ப் பால்.

## 3. வினையாலணையும் பெயர்

1. அடியிற் கண்ட வரிசைகளிலுள்ள வினை முற்றுக்களைக் கவனி.

| முதல் வரிசை | இரண்டாம் வரிசை |
|---|---|
| கந்தன் குதித்தான் | குதித்தவனைப் பார் |
| அவன் வந்தான் | வந்தவன் போனான் |
| கண்ணன் மாண்டான் | மாண்டார் வருவரோ? |

முதல் வரிசையிலுள்ள வினைமுற்றுக்கள் எழுவாய்களின் செயல்களை உணர்த்துகின்றன.

இரண்டாம் வரிசையிலுள்ள வினைமுற்றுக்கள் எழுவாய்களாக வந்து வேறு வினைமுற்றுக்களைக் கொண்டு முடிகின்றன. இவை வினையாலணையும் பெயர் எனப்படும். (அதாவது வினைச்சொற்களால் உண்டாகும் பெயர்கள்.)

2. அடியிற் கண்டவற்றில் எவை வினையாலணையும் பெயர்? மற்றப் பெயர்களையும் இன்ன பெயர் என்று கூறுக.

1. சூடிக்கொடுத்தாள் கோயில்.
2. பருந்து.
3. மௌரியர்.
4. வரபதி ஆட்கொண்டான்.
5. தகப்பனார்.
6. விதைத்தவன்.
7. மறவர்.
8. பார்ப்பார்.
9. அடைப்பான்.
10. சிங்கம்.
11. இட்டார் பெரியார்.
12. வருத்தம்.
13. வட்டம்.
14. விழுந்ததை எடு.
15. கொடுத்து வைத்தவன் தின்கிறான்.
16. பள்ளிகொண்டான்
17. நம்பினோர் கைவிடப்படார்.
18. சோலை.
19. வேண்டுவன.
20. சோளம்.

## 4. பால்

1. பெயர்ச் சொற்கள் ஐந்து வகைப்படும் அவையாவன :

(1) ஆண்பால் (3) பலர்பால் (5) பலவின்பால்
(2) பெண்பால் (4) ஒன்றன்பால்

2. ஆண் பாலில் 'அன்' என்று முடியும் சில பெயர்கள் பெண் பாலில் 'இ' என்று முடியும்.

| ஆண்பால் | பெண்பால் | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|---|
| அரசன் | அரசி | தலைவன் | தலைவி |
| அழகன் | அழகி | திருடன் | திருடி |
| இராக்ஷஸன் | இராக்ஷஸி | தோழன் | தோழி |
| உத்தமன் | உத்தமி | நாயகன் | நாயகி |
| எஜமானன் | எஜமானி | பாங்கன் | பாங்கி |
| ஒருவன் | ஒருத்தி | பாட்டன் | பாட்டி |
| குருடன் | குருடி | பாதகன் | பாதகி |
| கூனன் | கூனி | புத்திரன் | புத்திரி |
| சகோதரன் | சகோதரி | புதல்வன் | புதல்வி |
| செவிடன் | செவிடி | மாமன் | மாமி |

3. ஆண்பாலில் 'அன்' என்று முடியும் சில பெயர்கள் பெண்பாலில் 'அள்' என்று முடியும்.

| ஆண்பால் | பெண்பால் | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|---|
| அவன் | அவள் | கெட்டவன் | கெட்டவள் |
| இவன் | இவள் | நல்லவன் | நல்லவள் |
| எவன் | எவள் | பெரியவன் | பெரியவள் |
| யாவன் | யாவள் | செய்தவன் | செய்தவள் |
| மற்றவன் | மற்றவள் | உள்ளவன் | உள்ளவள் |

4. ஆண் பாலில் 'அன்' என்று முடியும் சில ஜாதிப்பெயர்கள் பெண்பாலில் 'ச்சி' என்று முடியும்.

| ஆண்பால் | பெண்பால் | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|---|
| இடையன் | இடைச்சி | துலுக்கன் | துலுக்கச்சி |
| கணக்கன் | கணக்கச்சி | பறையன் | பறைச்சி |
| கன்னடியன் | கன்னடிச்சி | வள்ளுவன் | வள்ளுவச்சி |
| சாலியன் | சாலியச்சி | வாணியன் | வாணிச்சி |
| சேணியன் | சேணியச்சி | வேடன் | வேடச்சி |

5. ஆண்பாலில் 'அன்' என்று முடியும் சில ஜாதிப் பெயர் பெண்பாலில் 'த்தி' என்று முடியும்.

| ஆண்பால் | பெண்பால் | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|---|
| குயவன் | குயத்தி | தச்சன் | தச்சத்தி |
| குறவன் | குறத்தி | அம்பட்டன் | அம்பட்டத்தி |
| செம்படவன் | செம்படத்தி | மறவன் | மறத்தி |

6. ஆண்பாலில் 'ஆன்' என்று முடியும் ஜாதிப் பெயர் பெண்பாலில் 'த்தி' என்று முடியும்.

| ஆண்பால் | பெண்பால் | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|---|
| கன்னான் | கன்னாத்தி | பார்ப்பான் | பார்ப்பாத்தி |
| தட்டான் | தட்டாத்தி | வண்ணான் | வண்ணாத்தி |

7. ஆண்பாலில் 'ஆன்' என்று முடியும் சில பெயர்கள் பெண்பாலில் 'ஆள்' என்று முடியும்.

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| இல்லான் | — இல்லாள் |
| ஊரான் | — ஊராள் |
| பட்டணத்தான் | — பட்டணத்தாள் |
| வமிசத்தான் | — வமிசத்தாள் |

8. ஆண்பாலில் 'வான்' என்று முடியும் பெயர் பெண்பாலில் 'வதி' என்று முடியும்.

| ஆண்பால் | பெண்பால் | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|---|
| குணவான் | குணவதி | தனவான் | தனவதி |
| பாக்கியவான் | பாக்கியவதி | புண்ணியவான் | புண்ணியவதி |

**9.** ஆண்பாலில் 'காரன்' என்று முடியும் பெயர் பெண்பாலில் 'காரி' என்று முடியும்.

| ஆண்பால் | | பெண்பால் |
|---|---|---|
| கூலிக்காரன் | — | கூலிக்காரி |
| பணக்காரன் | — | பணக்காரி |
| வீட்டுக்காரன் | — | வீட்டுக்காரி |
| வேலைக்காரன் | — | வேலைக்காரி |

**10.** சில பெயர்கள் ஆண்பாலுக்கு ஒரு சொல்லாகவும் பெண்பாலுக்கு வேறு சொல்லாகவும் வரும்.

| ஆண்பால் | பெண்பால் | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|---|
| அண்ணன் | அக்காள் | தம்பி | தங்கை |
| அப்பன் | அம்மை | தந்தை | தாய் |
| கணவன் | மனைவி | புருஷன் | ஸ்திரி |

**11.** சில ஆண்பாற் பெயர்கள் பெண்பாற் பெயர்களாகும்போது 'னி' என்னும் எழுத்தைக் கடைசியில் பெறும்.

| ஆண்பால் | | பெண்பால் |
|---|---|---|
| பார்ப்பான் | — | பார்ப்பனி |
| சக்கரவர்த்தி | — | சக்கரவர்த்தினி |

**12.** 'சாலி' என்பது இரண்டு பாலுக்கும் பொது.

| | |
|---|---|
| அதிருஷ்டசாலி | குணசாலி |
| தைரியசாலி | புத்திசாலி |

**13.** இகரத்தைக் கடைசியில் உள்ள பெயர்களும் இருபாலுக்கும் பொது.

| | |
|---|---|
| பாவி | உரோகி |
| நோயாளி | குற்றவாளி |

## 5. எண்

**1.** பெயர்கள் ஒருமை, பன்மை என இருவகைப் படும்.

**2.** சில ஒருமைப் பெயர்களுக்கு 'கள்' என்பதைக் கூட்டினால் பன்மைப் பெயர்கள் உண்டாகும்.

| ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை |
|---|---|---|---|
| வாய் | வாய்கள் | மணி | மணிகள் |
| பாய் | பாய்கள் | துணி | துணிகள் |
| கால் | கால்கள் | நாடு | நாடுகள் |
| நூல் | நூல்கள் | வீடு | வீடுகள் |
| பேர் | பேர்கள் | ஆறு | ஆறுகள் |
| வேர் | வேர்கள் | கூறு | கூறுகள் |
| யானை | யானைகள் | குரங்கு | குரங்குகள் |
| பானை | பானைகள் | வண்டு | வண்டுகள் |
| மணை | மணைகள் | மலை | மலைகள் |
| திண்ணை | திண்ணைகள் | இலை | இலைகள் |
| கிளை | கிளைகள் | அரை | அரைகள் |

**3.** சில ஒருமை பெயர்களுடன் 'கள்' என்பதைக்கூட்டும்போது பன்மைப் பெயர்கள் உண்டாகும். இடையில் 'க்' தோன்றும்.

| ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை |
|---|---|---|---|
| ஈ | ஈக்கள் | தெரு | தெருக்கள் |
| பூ | பூக்கள் | கொசு | கொசுக்கள் |
| அணு | அணுக்கள் | வஸ்து | வஸ்துக்கள் |
| புரு | புருக்கள் | எழுத்து | எழுத்துக்கள் |
| பந்து | பந்துக்கள் | முத்து | முத்துக்கள் |
| ஜந்து | ஜந்துக்கள் | வாத்து | வாத்துக்கள் |

**4.** ஒருமைப் பெயரின் ஈற்றில் 'ம்' இருந்தால் பன்மையாக மாறும்போது 'ங்' என்று மாறி 'கள்' பெறும்.

| ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை |
|---|---|---|---|
| குளம் | குளங்கள் | மரம் | மரங்கள் |
| பக்கம் | பக்கங்கள் | மாதம் | மாதங்கள் |
| பாடம் | பாடங்கள் | வருஷம் | வருஷங்கள் |

**5.** ஒருமைப் பெயர் தனிக் குற்றெழுத்தோடு 'ல்' பெற்றிருந்தால் பன்மையாக மாறும்போது 'ற்' என்று மாறி 'கள்' பெறும்.

| ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை |
|---|---|---|---|
| கல் | கற்கள் | பல் | பற்கள் |
| சொல் | சொற்கள் | புல் | புற்கள் |

**6.** ஒருமைப் பெயரின் ஈற்றில் 'ள்' இருந்தால் பன்மையாக மாறும்போது 'ட்' என்று மாறி 'கள்' பெறும்.

| ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை |
|---|---|---|---|
| ஆள் | ஆட்கள் | தோள் | தோட்கள் |
| நாள் | நாட்கள் | வாள் | வாட்கள் |

**7.** ஒருமையோடு 'மார்' என்றும் அதனுடன் 'கள்' என்றும் சேர்ந்து சில பன்மைப் பெயர்கள் இருவகையாக உண்டாகும்.

| ஒருமை | பன்மை (மார்) | பன்மை (மார்கள்) |
|---|---|---|
| குரு | குருமார் | குருமார்கள். |
| செட்டி | செட்டிமார் | செட்டிமார்கள். |
| தங்கை | தங்கைமார் | தங்கைமார்கள். |
| தமையன் | தமையன்மார் | தமையன்மார்கள். |
| தம்பி | தம்பிமார் | தம்பிமார்கள். |
| துரை | துரைமார் | துரைமார்கள். |
| தோழி | தோழிமார் | தோழிமார்கள். |
| மந்திரி | மந்திரிமார் | மந்திரிமார்கள். |

8. ஆண்பாலில் 'அன்' என்றும் பெண்பாலில் 'அள்' என்றும் முடியும் பெயர்கள் பன்மையில் 'அர்கள்' பெறும்.

| ஆண்பால் | பெண்பால் | இருபாற் பன்மை |
|---|---|---|
| அவன் | அவள் | அவர்கள். |
| இவன் | இவள் | இவர்கள். |
| எவன் | எவள் | எவர்கள். |
| மற்றவன் | மற்றவள் | மற்றவர்கள் |
| நல்லவன் | நல்லவள் | நல்லவர்கள் |
| கெட்டவன் | கெட்டவள் | கெட்டவர்கள் |

9. ஆண்பாலில் 'ஆன்' என்றும் பெண்பாலில் 'ஆள்' என்றும் முடியும் பெயர்கள் பன்மையில் 'ஆர்' பெறும்.

| ஆண்பால் | பெண்பால் | இருபாற் பன்மை |
|---|---|---|
| ஊரான் | ஊராள் | ஊரார் |
| வீட்டான் | வீட்டாள் | வீட்டார் |
| வமிசத்தான் | வமிசத்தாள் | வமிசத்தார் |

## 6. வேற்றுமை

1. பெயர்ச் சொற்களின் கடைசியில் வந்து அவற்றின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை. அது எட்டு வகைப்படும். அவை :

| | |
|---|---|
| முதல் வேற்றுமை. | ஐந்தாம் வேற்றுமை. |
| இரண்டாம் வேற்றுமை. | ஆறாம் வேற்றுமை. |
| மூன்றாம் வேற்றுமை. | ஏழாம் வேற்றுமை. |
| நான்காம் வேற்றுமை. | எட்டாம் வேற்றுமை. |

**2.** ஒரு பொருளின் இயல்பான பெயரே முதல் வேற்றுமை. அது வினைமுற்று, பெயர்ச்சொல், வினப்பெயர் இவற்றில் ஒன்றைக்கொண்டு முடியும்.

(உ-ம்.) வேலன் வந்தான்.
மணி என் தம்பி.
அவன் யார்?

**3.** பெயர்ச்சொல் 'ஐ' என்னும் உருபை ஏற்றுப் பொருள் வேறுபட்டால் இரண்டாம் வேற்றுமையாம்.

(உ-ம்.) கந்தனைக் கொன்ருன்.

**4.** அடியிற் கண்ட இரண்டாம் வேற்றுமைப் பெயர்கள் என்ன பொருளாய் வருகின்றன?

(உ-ம்.) கோட்டையைக் கட்டினன். கோட்டை கட்டப்படும் பொருளாய் வந்தது.

1. பானையைச் செய்தான்.
2. காட்டை அழித்தான்.
3. ஆற்றை அடைந்தான்.
4. முள்ளை நீக்கினன்.
5. சிங்கத்தை ஒத்தவன்.
6. அறிவை யுடையவன்.
7. தந்தையை ஒவ்வான்.
8. மானம் இல்லான்.
9. வித்தையை விரும்பினன்.
10. பொருளை அறிந்தான்.
11. குழந்தையைக் கூப்பிடு.
12. தந்தையை வணங்கினன்.

இரண்டாம் வேற்றுமைப் பெயர்கள் செய்யப்படும் பொருள், அழிக்கப்படுபொருள், அடையப்படுபொருள், நீக்கப்படுபொருள், ஒக்கப்படுபொருள், ஒவ்வாமைப் பொருள், உடமைப்பொருள், இன்மைப்பொருள், விரும்பப்படுபொருள், அறியப்படுபொருள், அழைக்கப்படுபொருள், வணங்கப்படுபொருள் முதலிய பலபொருள்களில் வரும் (ஒக்குதல் - ஒத்திருத்தல்; ஒவ்வாமை - ஒத்து இல்லாமை; இன்மை - இல்லாதது; உடமை - வைத்திருத்தல்.)

5. அடியிற் கண்ட இரண்டாம் வேற்றுமைப் பெயர்கள் இன்னபொருளில் வந்தன என்று காரணத்துடன் கூறுக.

1. வேலன் மரத்தை வெட்டினன்.
2. மாடுகள் ஊரைச் சேர்ந்தன.
3. அரசன் கோயிலைக் கட்டினன்.
4. அவன் புஜங்கள் மலையை ஒத்தன.
5. மகன் வேலையை விட்டான்.
6. நான் புத்தகத்தை வைத்திருக்கிறேன்.
7. நீர் கதையைக் கேட்பீர்.
8. சேணியன் துணியை நெய்தான்.
9. வாணியன் எண்ணெயை விற்கிறன்.
10. கண்ணன் புல்லாங்குழல் ஊதினன்.
11. வேடன் கிளையை உலுக்கினன்.
12. கிழவி தோசையைச் சுட்டாள்.
13. வேடன் பறவையைப் பிடித்தான்.
14. கந்தன் மரத்தில் ஏறினன்.
15. புலவர் பாட்டைப் பாடினர்.
16. ஜோகி பாம்பை ஆட்டினன்.

17. உழவன் நெல்லைத் தூவினான்.
18. மகள் சட்டியைச் சுரண்டினாள்.
19. கழுதை நாயை உதைத்தது.
20. நாய் அதன் காலைக் கடித்தது.

இரண்டாம் வேற்றுமைப் பொருள் இவ்விதம் பல பொருள்களில் வந்தாலும் எல்லாவற்றையும் முதலில் சொல்லப்பட்ட செய்யப்படும் பொருளில் வந்ததாகக் கூறுவது இலக்கண முறை. செய்யப்படும் பொருள் எனினும் செயப்படுபொருள் எனினும் ஒன்று. எனவே இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருளில் வரும்.

**6.** மூன்றும் வேற்றுமையின் உருபுகள் 'ஆல், ஒடு, உடன்' ஆகும். 'கொண்டு' என்பதும் வரும்.

(உ-ம்.) ராமனால் கட்டப்பட்ட கோயில்; ராமனோடு போனான்; ராமனுடன் போனான்.

**7.** அடியிற் கண்ட மூன்றும் வேற்றுமைப் பெயர்களின் பொருளைக் கவனி.

1. கோலால் அடித்தான்.
2. சீமானால் கட்டப்பட்ட சத்திரம்.
3. இராமனுடன் சீதை போனாள்.
4. இராமனோடு இலக்ஷ்மணனும் சென்றான்.

(1) கோல் அடிப்பதற்கு உதவின கருவி.
(2) சீமான் சத்திரம் கட்டின கர்த்தா.
(3) சீதையின் போகும் செயல் இராமனிடத்திலும் நிகழ்ந்தது.
(4) இலக்ஷ்மணனின் போகும் செயல் இராமனிடத்திலும் நிகழ்ந்தது.

**8.** அடியிற் கண்ட மூன்றும் வேற்றுமைப் பெயர்கள் எப்பொருளைத் தருகின்றன? இரண்டாம் வேற்றுமைப் பெயர்களின் பொருளையும் கூறுக:

1. திருடன் வேடனால் கொல்லப்பட்டான்.
2. அண்ணனுடன் தம்பியும் போனான்.
3. வேடன் திருடனை ஈட்டியால் குத்தினான்.
4. முருகன் வேலனுடன் பேசுகிறான்.
5. வேடன் புறாக்களைத் துப்பாக்கியால் சுட்டான்.
6. மரம் என்னால் வளர்க்கப்பட்டது.
7. கோழியோடு குஞ்சு ஓடிற்று.
8. மாலை மரகதத்தால் கட்டப்பட்டது.
9. புருஷனுடன் மனைவியும் இறந்தாள்.
10. நான் பழத்தைக் கத்தியால் அறுத்தேன்.

**9.** மூன்றும் வேற்றுமை உருபுகளில் 'ஆல்' கருவிப்பொருளிலும், கருத்தாப்பொருளிலும் வரும். 'ஓடு,' 'உடன்' உடனிகழ்ச்சிப்பொருளில் வரும்.

**10.** அடியிற் கண்ட மூன்றும் வேற்றுமைப் பெயர்கள் எப்பொருளில் வந்தன? காரணத்துடன் கூறுக:

1. கந்தன் கோலால் அடித்தான்.
2. வேலனோடு முருகன் வண்டி ஏறினான்.
3. அசோகரால் கலிங்கதேசம் நாசமடைந்தது.
4. குருடன் ஊன்றுகோலால் வழி அறிகிறான்.
5. ஐம்மா வள்ளியுடன் விளையாடினாள்.
6. அரசாங்கத்தாரால் ஏரி வெட்டப்பட்டது.
7. நாம் மூக்கினால் வாசனை அறிகிறோம்.

8. வண்ணான் சேணியனுடன் பேசினான்.
9. குழந்தை விரலால் கண் குத்திற்று.
10. தகப்பனால் குடும்பம் நடக்கிறது.

**11.** நான்காம் வேற்றுமையின் உருபு 'கு,' 'ஆக' என்பதும் வரும்.

(உ-ம்.) வீட்டுக்கு வந்தான்.
கூலிக்காக வேலை செய்தான்.

**12.** அடியிற் கண்ட சொற்றொடர்களில் நான்காம் வேற்றுமை தரும் பொருளைக் கவனி.

1. ஏழைகளுக்கு அன்னம் அளித்தான்.
2. எலிக்குப் பகை பூனை.
3. குசேலனுக்கு நண்பன் கண்ணன்.
4. விண்ணுலகம் அறவோர்க்கு உரியது.
5. சோற்றுக்கு அரிசி வேண்டும்.
6. சம்பளத்துக்குக் கணக்கு எழுதினான்.
7. தசரதனுக்கு மகன் இராமன்.

(1) ஏழைகள் அன்னம் கொள்ளுதலை உணர்த்துகிறது.
(2) எலிக்கும் பூனைக்குமுள்ள பகையை உணர்த்துகிறது.
(3) குசேலனுக்கும் கண்ணனுக்கும் இருந்த நட்பை உணர்த்துகிறது.
(4) அறவோர்க்குத் தகுந்தது இது என்று உணர்த்துகிறது.
(5) சோறு சமைக்க முதற் காரணமாயுள்ளது அரிசி என்று உணர்த்துகிறது.
(6) சம்பளத்தின் நிமித்தம் எழுதினான் என்பதை உணர்த்துகிறது.

(7) தசரதனுக்கும் இராமனுக்கும் இருந்த முறையை உணர்த்துகிறது.

13. அடியிற் கண்ட சொற்றொடர்களில் நான்காம் வேற்றுமை எப்பொருளில் வந்தது?

1. கந்தன் வேலனுக்கு நண்பன்.
2. கஞ்சி நோயாளிக்கு ஏற்ற உணவு.
3. பிச்சைக்காரன் சோற்றுக்குப் பாட்டுப்பாடினன்.
4. தருமனுக்குத் தம்பி பீமன்.
5. ருஷியர் ஜர்மனியருக்கு விரோதிகள்.
6. அண்ணன் தம்பிக்குப் புத்தகம் தந்தான்.
7. ஜன்னலுக்குக் கம்பியும் சட்டமும் வேண்டும்.
8. உபாத்தியாயருக்கு மாணவர்மேல் அன்பு உண்டு.
9. கந்தன் மாட்டுக்குத் தீனி போட்டான்.
10. இம்மாளிகை அரசருக்குச் சொந்தமானது.

14. நான்காம் வேற்றுமை கொள்ளுதற் பொருள், பகைப்பொருள், நட்புப்பொருள், தகுதிப் பொருள், முதற்காரணப்பொருள், நிமித்தகாரணப் பொருள், முறைப்பொருள், உடைமைப்பொருள் முதலிய பொருள்களில் வரும்.

15. அடியிற் கண்டவற்றில் நான்காம் வேற்றுமை எப்பொருளில் வந்தது? காரணத்துடன் கூறுக:

1. சிவபிரான் அர்ஜுனனுக்கு வரம் அளித்தார்.
2. மாளிகையில் வசிப்பது செல்வர்க்குத் தகும்.
3. கடவுள் நமக்குத் தந்தை.
4. ஞானி எளியார்க்கு நண்பன்.

5. அடுப்புக்கு விறகு வேண்டும்.
6. அரசனுக்குப் பகைவன் அனைவர்க்கும் பகைவன்.
7. வாடகைக்கு வண்டி ஓட்டினான்.
8. கட்டிலுக்குக் கால்கள் நான்கு.
9. வள்ளிக்குக் கணவன் கந்தன்.
10. பாம்புக்குப் பகை கருடன்.

**16.** ஐந்தாம் வேற்றுமை உருபுகள் 'இல், இருந்து, நின்று' ஆகும்.

(உ-ம்.) அரசனில் அரசி நல்லவள்.
வீட்டிலிருந்து போனான்.
மலையினின்று உருண்டது.

**17.** அடியிற் கண்ட சொற்றொடர்களில் ஐந்தாம் வேற்றுமை உருபின் பொருளைக் கவனி.

1. அரசன் அரண்மனையிலிருந்து புறப்பட்டான்.
2. காக்கையிற் கரியது களாப்பழம்.
3. தஞ்சையின் தெற்குத் திருநெல்வேலி.
4. கொடையில் சிறந்தவன் குமணன்.
5. இராமனில் கந்தன் நல்லவன்.

(1) அரசன் அரண்மனையை நீங்கினதை உணர்த்துகிறது.
(2) காக்கையின் நிறம் களாப்பழத்தை ஒத்து இருக்கின்றது என்று உணர்த்துகிறது.
(3) தஞ்சைக்குத் தெற்கு எல்லையை உணர்த்துகிறது.
(4) குமணன் எதில் சிறந்தவன் என்று உணர்த்துகிறது.
(5) இராமனைக் காட்டிலும் நல்லவன் என்று வித்தியாசத்தை உணர்த்துகின்றது.

**18.** அடியிற்கண்ட சொற்றொடர்களில் ஐந்தாம் வேற்றுமை உருபு என்ன உணர்த்துகின்றது?

1. மலரில் சிறந்தது தாமரை.
2. ஊரின் கிழக்கில் தோப்பு இருக்கிறது.
3. வள்ளியில் லக்ஷ்மி பெரியவள்.
4. வானத்தினின்று மழை பெய்கிறது.
5. நகரங்களில் சென்னை பெரியது.
6. வேலன் மரத்திலிருந்து இறங்கினான்.
7. கண்டங்களில் சிறியது ஆஸ்திரேலியா.
8. புற்றினின்று ஈசல் கிளம்பிற்று.
9. ஊரிலிருந்து ஆறு ஒரு மைல் தூரம்.
10. பாம்புகளில் கொடியது கருநாகம்.

**19.** ஐந்தாம் வேற்றுமை உருபு நீக்கப்பொருள், ஒப்புப்பொருள், எல்லைப்பொருள், ஏதுப்பொருள் ஆகிய இவற்றில் வரும்.

**20.** அடியிற்கண்ட சொற்றொடர்களில் ஐந்தாம் வேற்றுமை உருபு இன்ன பொருளில் வந்தது என்று காரணத்துடன் கூறுக.

1. அரசன் சிங்காதனத்தினின்று இறங்கினான்.
2. சுந்தரம் கண்ணனில் யுக்திசாலி.
3. பெங்களூரின் மேற்கு மங்களூர்.
4. மேனாடு கைத்தொழிலில் மேம்பாடடைந்துள்ளது.
5. ஜாடியிலிருந்து புகை கிளம்பிற்று.
6. புகையினின்று அரக்கன் உண்டானான்.
7. கண்ணகி கற்பிற் சிறந்தவள்.
8. குழாயினின்று தண்ணீர் வருகின்றது.
9. இந்தியாவின் வடக்கில் இமயமலை உள்ளது.
10. கப்பலிலிருந்து ஜனங்கள் இறங்கினார்கள்.

**21.** ஆறும் வேற்றுமையின் உருபுகள் 'அது, உடைய' ஆகும்.

(உ-ம்.) இராமனது வீடு.
கண்ணனுடைய காது.

**22.** அடியிற்கண்ட சொற்றொடர்களில் ஆறும் வேற்றுமைப் பெயர்கள் எதை உணர்த்த வந்தன?

1. கோபாலனது அன்பு
2. வெள்ளாட்டு மந்தை
3. கோபாலனுடையகண்
4. ஆட்டு மந்தை
5. சோளமா
6. கோபாலனது பசு
7. கோபாலனுடைய வீடு
8. கோபாலனுடைய நாள்

(1) கோபாலனுடைய குணத்தை உணர்த்த வந்தது.
(2) கோபாலனுடைய உறுப்பை உணர்த்த வந்தது.
(3) ஒரேவிதமான ஆடுகளின் கூட்டத்தை உணர்த்த வந்தது.
(4) பலவிதமான ஆடுகளின் கூட்டத்தை உணர்த்த வந்தது.
(5) சோளம் திரிந்து மாவானதை உணர்த்த வந்தது.
(6) கோபாலனுடைய பொருளை உணர்த்த வந்தது.
(7) கோபாலனுடைய இடத்தை உணர்த்த வந்தது.
(8) கோபாலனுடைய காலத்தை உணர்த்த வந்தது.

**23.** அடியிற்கண்ட சொற்றொடர்களில் ஆறும் வேற்றுமைப் பெயர்கள் என்ன உணர்த்த வந்தன?

1. நாயினுடைய கால்.
2. அரசனது அரண்மனை.
3. நமனுடைய நாள்.

4. கிளிகளுடைய கூட்டம்.
5. பறவைகளது கூட்டம்.
6. பட்டினுடைய நூல்
7. வள்ளியினுடைய ஆடைகள்.
8. ஸ்ரீ ஜயந்தி கிருஷ்ணனுடைய நாள்.
9. முனிவரது கோபம்.
10. குள்ளனுடைய கழுத்து.

**24**. அடியிற்கண்ட இருவரிசை ஆறும் வேற்றுமைப் பெயர்களைக் கவனி. எவற்றில் சம்பந்தம் என்றும் பிரியாமலிருக்கும்? எவற்றில் சம்பந்தம் பிரியக்கூடும்?

| முதல் வரிசை | இரண்டாம் வரிசை |
| --- | --- |
| 1. கோபாலனது அன்பு. | 1. கோபாலனுடைய பசு. |
| 2. கோபாலனுடைய கண். | 2. கோபாலனுடைய வீடு. |
| 3. வெள்ளாட்டு மந்தை | 3. கோபாலனுடைய நாள். |
| 4. ஆட்டு மந்தை. | |
| 5. சோள மா. | |

முதல் வரிசையில் வரும் தனித்தனி இரண்டு பொருள்களுக்குமுள்ள சம்பந்தம் ஒன்றுபட்டிருக்கிறது. அவை தனித்தனிமையாய் வேறாக நிற்பதில்லை. உதாரணமாகக் கோபாலனுடைய அன்பு அவனை விட்டுத் தனியாகப் பிரியாமல் அவனுடனேயே ஒன்றுபட்டிருக்கிறது. அவ்விரண்டு பொருள்களும் தமக்குள் ஒன்றோடொன்று ஒன்றுபட்ட சம்பந்தம் கொண்டுள்ளதால், அவை தற்கிழமைப்பொருளில் வருகின்றன.

இரண்டாம் வரிசையில் வரும் தனித்தனி இரண்டு பொருள்களுக்குமுள்ள சம்பந்தம் ஒற்றுமைப்பட்டில்லை.

வேறான (பிரிந்துள்ள) இரண்டு பொருள்களுக்கும் உள்ள சம்பந்தம் காட்டுவதால், அவை பிறிதின்கிழமைப்பொருளில் வருகின்றன. (கிழமை - சம்பந்தம்.)

**25.** அடியிற்கண்ட சொற்றொடர்களில் வரும் வேற்றுமைப் பெயர்கள் எக்கிழமைப் பொருளில் வந்தன?

1. குழந்தையினுடைய காப்பு.
2. கோகிலத்தினுடைய கூந்தல்.
3. தமயந்தியினுடைய அழகு.
4. மிருகங்களினது தொகுதி.
5. சிங்கங்களது கூட்டம்.
6. முனிவரது ஆசிரமம்.
7. பாலினுடைய ஏடு.
8. ஸ்ரீராமநவமி இராமனது நாள்.
9. அர்ஜுனனது வில்.
10. அர்ஜுனனது வீரம்.

**26.** ஆறும் வேற்றுமை உருபுகள் பண்புத்தற்கிழமை, உறுப்புத்தற்கிழமை, ஒன்றன்கூட்டத்தற்கிழமை, பலவினீட்டத்தற்கிழமை, திரிபினாக்கத்தற்கிழமை ஆகிய பொருள்களில் தற்கிழமையில் வரும்; பிரிதின்கிழமையில் பொருட்பிரிதின்கிழமை, இடப்பிரிதின்கிழமை, காலப்பிரிதின்கிழமை ஆகிய பொருள்களில் வரும். எனவே பிரிதின்கிழமை பொருள், இடம், காலம் ஆகிய பொருள்களில் வரும். தற்கிழமை மற்ற பொருள்களில் வரும்.

(உ-ம்.) ஈட்டம் - கூட்டம்.
திரிபின் ஆக்கம் - திரிந்து ஆவது.

**27.** அடியிற்கண்ட சொற்றொடர்களில் ஆறும் வேற்றுமைப் பெயர்களின் பொருள் இன்னதெனக் கூறுக:

1. குறவனுடைய மணி.
2. வீரனது தோள்.
3. யானைகளது கூட்டம்.
4. மீன்களது கும்பல்.
5. மருமகனது தோப்பு.
6. மகமது நபியினுடைய நாள்.
7. நிலத்தினது வளமை.
8. ஜனகனது கடை.
9. தேவேந்திரன் தேவர்களுடைய தலைவன்.
10. பூதங்களது கணங்கள்.
11. அரசனது மகள்.
12. மணியினுடைய ஒளி.
13. பூவினுடைய மணம்.
14. தாயினுடைய அன்பு.
15. வர்த்தகனுடைய கடை.
16. பையனுடைய அறிவு.
17. மிருகங்களினுடைய தோல்.
18. சீமானினுடைய வீடு.
19. தண்ணீரினுடைய வேகம்.
20. புஸ்தகத்தினுடைய விலை.

**28.** கண், முன், பின், உள், கீழ், மேல், இடம் முதலியன ஏழாம் வேற்றுமையின் உருபுகள். அவை இடங்களை உணர்த்தும்.

(உ-ம்.) மலையின்கண் வந்தது. தலைமேல் தொப்பி. அவன் பின் இவன் வந்தான்.

**29.** அடியிற்கண்ட இருவரிசைச் சொற்றொடர்களிலுள்ள ஏழாம் வேற்றுமைப் பெயர்களின் பொருள்களைக் கவனி :

| முதல் வரிசை | இரண்டாம் வரிசை |
|---|---|
| 1. ரூபாயின்கண் சப்தம் இருக்கிறது. | ரூபாயின்கண் அச்செழுத்து உண்டு. |
| 2. ஆகாயத்தில் சூரியன் பிரகாசிக்கிருன். | ஆகாயத்தில் கொக்கு பறக்கிறது. |
| 3. தைமாதத்தில் பொங்கல் பண்டிகை வரும். | தைமாதத்தில் திருவிழா நடக்கும். |
| 4. கையில் விரல்கள் உள்ளன. | கையில் காப்பு உள்ளது. |
| 5. பெருந்தன்மையின்கண் உள்ளது பொறுமை. | பெருந்தன்மையின்கண் கீர்த்தி உண்டு. |
| 6. தீவினையில் பாவம் உண்டு. | தீவினையில் அச்சம் உண்டு. |

முதல் வரிசையிலுள்ள ஏழாம் வேற்றுமை உருபுகளை ஏற்றுள்ள பெயர்கள் உணர்த்தும் பொருள்களுக்கும் அவற்றிலுள்ள பொருள்களுக்கும் உள்ள சம்பந்தம் பிரிக்க முடியாதபடி ஒன்றுபட்டுத் தம்மிலேயே இருக்கின்றன. ஆகையால் அவை தற்கிழமை.

இரண்டாம் வரிசையில் இரண்டுக்குமுள்ள சம்பந்தம் பிரிக்கக்கூடுமாகையால் அவை பிறிதின்கிழமை. (கிழமை - சம்பந்தம்; தற்கிழமை - தன் சம்பந்தம்; பிறிதின்கிழமை வேறொன்றின் சம்பந்தம்.)

**30.** அடியிற்கண்ட சொற்றொடர்களில் ஏழாம் வேற்றுமைப் பெயர்கள் எப்பொருளில் வந்தன ?

1. வயிற்றின்கண் குடல் இருக்கிறது.
2. வீட்டின்கண் ஜன்னல் இருக்கிறது.
3. ஒரு மணியில் அறுபது நிமிஷங்கள் இருக்கின்றன.
4. காலையில் சாப்பாடு போடப்படும்.
5. புன்சிரிப்பின்கண் அழகு உள்ளது.
6. வியாசத்தின்கண் பிழை இருக்கிறது.
7. முயற்சியில் அயர்ச்சி கூடாது.
8. மணியின்கண் ஒளி இருக்கிறது.
9. காலையில் சூரியன் உதிக்கிறான்.
10. ஆட்டத்தின்கண் பாட்டுப் பாடப்படுகிறது.

**31.** அடியிற்கண்ட சொற்றொடர்களில் ஏழாம் வேற்றுமையில் வரும் பெயர்ச்சொற்களின் வகை கூறுக :

(உ-ம்.) வீட்டில் உண்டான்.
(வீட்டில் - இடப்பெயர்.)

1. மரத்தின்கண் இலைகள் இருக்கின்றன.
2. சமுத்திரத்தில் தீவு இருக்கிறது.
3. ஒரு வருஷத்தில் பன்னிரண்டு மாதங்கள் உண்டு.
4. வாயின்கண் பற்கள் இருக்கின்றன.
5. வறுமையில் செம்மை அவசியம்.
6. விளையாட்டில் சந்தோஷம் உண்டு.
7. கோட்டையில் போர்வீரர் இருந்தனர்.
8. பசுவின் காலில் குளம்புகள் இருக்கின்றன.
9. விளக்கில் ஒளி உண்டு.
10. வாழ்வில் ஆடம்பரம் கூடாது.

**32.** ஏழாம் வேற்றுமை உருபு பொருள், இடம், காலம், சினை, குணம், தொழிலை இடமாகக் கொண்டு தற்கிழமை, பிரிதின்கிழமைப் பொருள் களில் வரும்.

**33.** அடியிற்கண்ட சொற்றொடர்களில் ஏழாம் வேற்றுமை உருபுக்கு எது இடமாய் எப்பொருளில் வந்தது?

1. கிளியின்கண் சிறகு உண்டு.
2. சிறகின்கண் ரோமம் உண்டு.
3. வாய்மையின்கண் சிறப்பு உள்ளது.
4. மாசி மாதத்தில் மஹா சிவராத்திரி வரும்.
5. வெள்ளிக்கிழமையில் சந்தை கூடும்.
6. தூக்கத்தில் கனவு கண்டான்.
7. காட்டில் தேக்கு வளர்கிறது.
8. சமுத்திரத்தில் திமிங்கிலம் இருக்கிறது.
9. கூழில் உப்பு இல்லை.
10. தூக்கத்தில் சுகம் இருக்கிறது.
11. வீட்டின்பின் வண்டி இருக்கிறது.
12. தையின்பின் மாசி வரும்.
13. பாதத்தின்மேல் கணுக்கால் இருக்கிறது.
14. தலையின்மேல் தொப்பி இருக்கிறது.
15. மேஜைக்குள் அறைகள் இருக்கின்றன.
16. ஞானியிடத்தில் பொறுமை உண்டு.
17. புத்தகத்தில் சித்திரங்கள் இருக்கின்றன.
18. காற்றில் உப்பு வாயு கலந்திருக்கிறது.
19. தீயில் உஷ்ணம் உண்டு.
20. இமய மலையின்மேல் பனிக்கட்டி மூடியிருக்கும்.

**34.** பெயர்ச் சொற்கள் அழைக்கப்படு பொருளில் வந்தால் எட்டாம் வேற்றுமையாகும்.

(உ-ம்.) இராமா ! தந்தாய் !

**35.** அடியிற்கண்ட முதல் வேற்றுமைப் பெயர்கள் எட்டாம் வேற்றுமைப் பெயர்கள் ஆகும் தன்மையைக் கவனி :

| முதல் வேற்றுமை | எட்டாம் வேற்றுமை |
|---|---|
| 1. மந்திரி | மந்திரீ ! |
| 2. நாடன் | நாட ! |
| 3. மகன் | மகனே ! |
| 4. தம்பி | தம்பி ! |
| 5. புலவர் | புலவீர் ! |
| 6. அப்பன் | அப்பா ! |

(1) கடைசியிலுள்ள எழுத்து திரிந்தது.
(2) கடைசியிலுள்ள எழுத்து மறைந்தது.
(3) கடைசியிலுள்ள எழுத்து திரிந்தது.
(4) இயல்பாய் இருக்கிறது.
(5) கடைசி எழுத்துக்கு முன்னுள்ள எழுத்து திரிந்தது.
(6) கடைசி எழுத்து கெட்டு முன்னுள்ள எழுத்து திரிந்தது.

**36.** அடியிற்கண்ட எட்டாம் வேற்றுமைப் பெயர்கள் எப்படி ஆயின ?

| | | |
|---|---|---|
| 1. தோழீ | 5. நங்காய் | 9. அரசே |
| 2. மானே | 6. அரச | 10. சேவகா |
| 3. மக்காள் | 7. வள்ளி | 11. பிள்ளாய் |
| 4. அரசர்பெரும | 8. பித்தா | 12. நண்பா |

**37.** விளி — அண்மை விளி, சேய்மை விளி, புலம்பல் விளி என்று மூவகைப்படும்.

(உ-ம்.) அண்மை - சமீபம். சேய்மை - தூரம்.

**33.** அண்மை விளி இயல்பாய் வரும்; சேய்மை விளி மேல் கூறியபடி விகாரப்பட்டு வரும்; புலம்பல் விளி ஓகாரம் பெற்று வரும்.

(உ-ம்.) (1) அரசே !
(2) அரசனே !
(3) அப்பாவோ !

## 7. வினைச்சொல்

**1.** ஒரு பொருளின் வேலையைக் காட்டும் சொல் **வினைச்சொல்.** அது வினைமுற்று எனவும் படும்.

**2.** அடியிற்கண்ட சொற்றொடர்களில் வினைமுற்றுக்களின் பொருளைக் கவனி:

| முதல் வரிசை | இரண்டாம் வரிசை |
|---|---|
| தொடுவேன் | தொடேன். |
| உண்டான் | உண்டானில்லை. |
| ஓடுங்கள் | ஓடாதீர். |
| படுத்தது | படுக்கவில்லை. |

முதல் வரிசையிலுள்ள வினைமுற்றுக்கள் வேலை செய்வதாகக் காட்டுகின்றன. அவற்றிற்கு உடன்பாட்டு **வினைமுற்றுக்கள்** என்பது பெயர்.

இரண்டாம் வரிசையிலுள்ள வினைமுற்றுக்கள் வேலைகள் செய்யாததாகக் காட்டுகின்றன. அவற்றிற்கு எதிர்மறை **வினைமுற்றுக்கள்** என்பது பெயர்.

3. அடியிற்கண்ட வினைமுற்றுக்களில் எவை உடன்பாட்டு வினைமுற்றுக்கள்? எவை எதிர்மறை வினைமுற்றுக்கள்?

1. உண்ணுதே.
2. தூங்கினன்.
3. வாழேன்
4. உடுத்தான்
5. சிரியேன்
6. ஆடினேன்.
7. குடிக்கவில்லை.
8. பதுங்குவீர்.
9. பாடாதே.
10. இடிந்தது.

4. அடியிற்கண்ட வினைமுற்றுக்களின் வகை கூறுக:

(உ-ம்.) கண்டான் — உடன்பாட்டு இறந்தகால வினைமுற்று.

1. படியான்.
2. குளிப்பான்.
3. கரைத்தான்.
4. குடித்தீர்.
5. நல்குவன்.
6. எழுது.
7. ஆடாதீர்.
8. வாழ்க.
9. சொன்னுய்.
10. காண்பியான்.

5. அடியிற்கண்ட சொற்றொடர்களில் எவற்றில் செயப்படுபொருள் உண்டு? எவற்றில் இல்லை?

1. இராமன் இலங்கையை அடைந்தான்.
2. இராமன் இராவணனைக் கொன்முன்.
3. இராமன் அயோத்திக்குத் திரும்பினன்.
4. இராமன் பட்டத்தைக் கட்டிக்கொண்டான்.
5. இராமன் நன்ருய் அரசாண்டான்.

செயப்படுபொருள் உள்ள வாக்கியங்களின் வினைமுற்றுக்களுக்குச் செயப்படுபொருள் குன்றுவினை என்பது

பெயர். செயப்படுபொருள் இல்லாத வாக்கியங்களின் வினைமுற்றுக்குச் செயப்படுபொருள் குன்றியவினை என்பது பெயர். (குன்று - குறை.)

**6.** அடியிற்கண்ட சொற்றொடர்களில் எவை செயப்படுபொருள் குன்றாவினை? எவை செயப்படு பொருள் குன்றியவினை?

1. முருகன் வள்ளியை மணந்தான்.
2. பறவை ஆகாயத்தில் பறந்தது.
3. இடையன் பாலைக் கறந்தான்.
4. வேடன் கிளியைப் பிடித்தான்.
5. வேடன் வீட்டுக்குப் போனான்.
6. அவன் தன் மனைவியைக் கண்டான்.
7. அவன் கிளியை அவளிடம் கொடுத்தான்.
8. அவள் அகமகிழ்ந்தாள்.
9. அவள் அதனுடன் பேசினாள்.
10. அவன் அதை விற்றுவிட்டான்.

**7. வினைமுற்றுக்கள் செய்வினை, செயப்பாட்டுவினை எனவும் இருவகைப்படும்.**

வேலையை கர்த்தா செய்வதாகக் கூறும் வினைமுற்று **செய்வினை.**

செயப்படுபொருள் கர்த்தாவாகக் கூறும் வினைமுற்று **செயப்பாட்டுவினை.**

(உ-ம்.) பூனை எலியைப் பிடித்தது. (செய்வினை.) எலி பூனையால் பிடிக்கப்பட்டது. (செயப்பாட்டுவினை.)

**8.** அடியிற்கண்ட சொற்றொடர்களிலுள்ள வினைமுற்றுக்கள் என்ன வினைமுற்றுக்கள்? செய்

வினைகளைச் செயப்பாட்டு வினைகளாகவும் செயப்பாட்டு வினைகளைச் செய்வினைகளாகவும் மாற்றுக:

1. வண்ணான் துணிகளைத் துவைத்தான்.
2. மாடு புலியால் கொல்லப்பட்டது.
3. பாட்டு மரகதத்தால் பாடப்பட்டது.
4. மங்களம் ஆடையை அணிந்தாள்.
5. வேலனால் ஆறு கடக்கப்பட்டது.
6. செம்படவன் படகை ஓட்டினான்.
7. ஐயர் கடவுளைப் பூசித்தார்.
8. தச்சனால் நாற்காலி செய்யப்பட்டது.
9. சாரதியால் வண்டி ஓட்டப்பட்டது.
10. நாகன் கடிதத்தை எழுதுவான்.

**9.** அடியிற்கண்ட இரு வரிசைச் சொற்றொடர்களிலுமுள்ள வினைமுற்றுக்களின் தன்மையை நோக்குக:

| முதல் வரிசை | இரண்டாம் வரிசை |
|---|---|
| இராமன் நடந்தான். | இராமன் மாட்டை நடத்தினான். |
| பெரியவர் வந்தார். | பெரியவர் மகனை வருவித்தார். |
| கிழவி உருண்டாள். | கிழவி பானையை உருட்டினாள். |

முதல் வரிசையிலுள்ள சொற்றொடர்களில் வினைமுற்றுக்கள் கர்த்தாவே மேற்படி காரியங்கள் தனக்கே செய்துகொண்டதாகக் காட்டுவதால் **தன்வினை.**

இரண்டாம் வரிசையிலுள்ள சொற்றொடர்களில் வினைமுற்றுக்கள் கர்த்தா வேறொரு பொருளை மேற்படி காரியங்களைச் செய்வித்ததாகக் காட்டுவதால் **பிறவினை.**

**10.** அடியிற்கண்ட சொற்றொடர்களில் எவை தன்வினை? எவை பிறவினை? தன்வினையைப் பிற

வினையாகவும், பிறவினையைத் தன்வினையாகவும் மாற்றி அதற்கேற்ப வாக்கியத்தையும் அமைக்க:

1. மகன் எழுந்தான்.
2. தாய் நெய் உருக்குகிறுள்.
3. கந்தன் வேலையைச் செய்தான்.
4. தாயார் மகனை அழைப்பித்தாள்.
5. அண்ணன் பாடசாலையில் படித்தான்.
6. வேடன் புதரில் மறைந்தான்.
7. உழவன் மாடுகளை வீட்டில் சேர்த்தான்.
8. கிழவன் கறியும் சோறும் உண்டான்.
9. வள்ளி அண்ணனுடன் பேசினுள்.
10. செட்டி வண்டியை ஓட்டினுன்.

## 8. எச்சங்கள்

1. அடியிற்கண்ட பெயரெச்சங்கள் என்ன பெயரெச்சங்கள்? தெரிநிலைப் பெயரெச்சங்களின் மற்ற காலங்காட்டும் பெயரெச்சங்களும் கூறுக. கொண்டு முடியும் சொற்களையும் அமைத்துப் படி.

| | | |
|---|---|---|
| 1. கேட்ட | 7. சிறிய | 13. கொடிய |
| 2. நடக்கிற | 8. வறிய | 14. பெறும் |
| 3. இனிய | 9. ஆடுகிற | 15. அமர்கின்ற |
| 4. கற்கும் | 10. திரண்ட | 16. வணங்கும் |
| 5. விளைகிற | 11. அருளின | 17. வளர்ந்த |
| 6. அழைக்கும் | 12. புறப்பட்ட | 18. கருதுகிற |

2. இவை உடன்பாட்டுப் பெயரெச்சங்கள். இவற்றின் எதிர்மறைப் பெயரெச்சங்களையும் கூறுக: முடியும் சொல்லையும் அமைத்துப் படி.

**3.** உன் புத்தகத்திலுள்ள பெயரெச்சங்களில் இருபதுக்கு இலக்கணம் கூறுக.

**4.** அடியிற்கண்ட வினையெச்சங்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவை? தெரிநிலை வினையெச்சங்களின் மற்ற காலங்காட்டும் வினையெச்சங்களையும் கூறுக. கொண்டு முடியும் சொற்களையும் அமைத்துப் படி.

| | | |
|---|---|---|
| 1. மறைந்து | 7. வாசித்து | 13. பயந்து |
| 2. அறைத்து | 8. கேட்க | 14. தரும்படி |
| 3. அமர | 9. அமர்ந்தால் | 15. வேண்ட |
| 4. புகழ்ந்தால் | 10. எதிர்த்து | 16. கூட்டி |
| 5. ஓங்கி | 11. கொன்றால் | 17. தாங்க |
| 6. பூரிக்க | 12. புறங்காட்டி | 18. விளங்க |

**5.** உன் புத்தகத்திலுள்ள வினையெச்சங்களில் பத்துக்கு இலக்கணம் கூறுக.

**6.** இவை உடன்பாட்டு வினையெச்சங்கள். இவற்றின் எதிர்மறை வினையெச்சங்களையும் கூறுக. முடியும் சொல்லையும் அமைத்துப் படி.

**7.** அடியிற் வரும் வினைச்சொற்களை வினையெச்சங்களாயும் பெயரெச்சங்களாயும் மாற்றி, கொண்டு முடியும் சொற்களையும் அமைத்துப் படி.

| | | |
|---|---|---|
| 1. செல் | 6. சுளை | 11. குட்டு |
| 2. புசி | 7. ஒழி | 12. உருள் |
| 3. துவக்கு | 8. குளி | 13. மடி |
| 4. பார் | 9. நகை | 14. விடு |
| 5. வெடி | 10. எழு | 15. தின் |

# III. வாக்கியம்

---

## 1. பகுப்பு

**1. அடியிற் கண்ட வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறுக. அவற்றைக் கொண்டு முடியும் வேற்றுமை யுருபுகளையும், எச்சங்களையும் அவற்றைச் சார்ந்துவரும் சொற்களுடன் எடுத்துக் கூறுக.**

**1.** குடியானவனுடைய மகன் சற்றும் அஞ்சாது, அந்தப் பெரிய பாம்பைக் கொம்பால் அடித்துக் கொன்றான்.

**2.** ஒரு துஷ்ட மனிதன், சிறு வயது முதல் வழிப் போக்கர்களை அடித்துக்கொன்று, அவர்கள் பொருள்களை அபகரித்து வந்தான்.

**3.** அவன் பல விடங்களிலும் சென்று திருடி, விசேஷமான சொத்துக்களை வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்தான்.

**4.** அவர்கள் ஒருவர்மே லொருவர் மோதிக்கொண்டு பயந்து, சுற்றுப் பக்கங்களில் ஓடி, அவஸ்தைப்பட்டுக் கீழே விழுந்தார்கள்.

**5.** ஒரு வயது சென்ற கிழவன், பெரிய வேங்கைப் புலியைக் கண்டு பயந்து, நடுநடுங்கி, கீழே விழுந்து உயிர் துறந்தான்.

6. வேலன் மகன் இராமன் ஒரு பெரிய நகரத்துக்குச் சென்று, வர்த்தகம் செய்தான்.

7. பிரதி தினமும், நற்குண நற்செய்கைகள் வாய்ந்த அம்மாது சிரோன்மணி, அதிகாலையில் எழுந்து, வீட்டு வேலையைச் சரிவரச்செய்து, தன் புருஷனை உண்பிப்பாள்.

8. வேலிக்குள்ளே இருந்த மாடுகளின் கயிற்றை, ஒரு தந்திரமான மனிதன் வெளியிலிருந்தே மெல்ல அவிழ்த்து விட்டான்.

9. பாரசீகதேசத்துப் பாடகர்கள் ஒரு வயது சென்ற கிழவியின் சிறிய குடிசையில் போய்த் தங்கினார்கள்.

10. சுந்தரமும், கண்ணனும் மறுநாட் காலையில் எழுந்து, தோட்டத்தில் வேலைசெய்யச் சந்தோஷத்துடன் சென்றார்கள்.

11. நாட்டுக்கோட்டைச் செட்டியுடன் கூட்டு வியாபாரம் செய்துவந்த சங்கரலிங்கம், தன் உழைப்பினால் மூன்று வருஷத்தில் மிக்க பொருள் சம்பாதித்து, அதே ஊரில் சொந்தத்தில் மேனாட்டுச் சாமான்களடங்கிய ஒரு கடை வைத்துக்கொண்டான்.

12. அவனுடைய தாய் தகப்பனார் அவனை எங்கும் தேடிக் காணாமல், மிகுந்த துக்கத்தில் மூழ்கி, வேறு ஊருக்குப் போய்விட்டார்கள்.

13. வெளியூரிலிருந்து சில வர்த்தகர்கள் சென்னைக்கு வந்து, தங்கள் சரக்குகளை விற்றுவிட்டுச் சாலை மார்க்கமாக வண்டிகளை யோட்டிக்கொண்டு, ஊருக்குத் திரும்பிப் போனார்கள்.

14. இருவரும் தந்திரமாக வீட்டுக்குச் சென்று, இருண்ட மூலையிலிருந்த பெரிய பெட்டியை மெல்லத் திறந்தார்கள்.

15. அரசனுடைய குமாரன் பெரிய வித்துவானிடம் கஷ்டப்பட்டுக் கற்ற அரிய பெரிய விஷயங்களை எல்லாம அறவே மறந்துவிட்டான்.

16. உலகம் போற்றும் உத்தமர் சரித்திரங்களை நாம் படித்து அவ்விதம் ஒழுக முயலவேண்டும்.

2. எழுவாய், பயநிலை, செயப்படுபொருள்களின் இடையில் வரும் சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும் பிறவரல் எனப்படும்.

3. அடியிற் கண்ட வாக்கியங்களை அடுத்த பக்கத்திலுள்ள கட்டடத்தில் வகுத்துக் காட்டுக:

(உ-ம்.)

1. கலிங்கதேசத்து அரசன் மாளவ தேசத்து அரசனைப் போரில் வென்றான்.

2. வர்த்தகன் வளர்த்த பெரிய நாய், குடிசையில் வசிக்கும் ஒரு வயது சென்ற கிழவியைத் துரத்திக் காலின்கண் கடித்தது.

3. கற்புக்கரசியான சீதாபிராட்டியார், தான் அணிந்திருந்த உயர்ந்த வஸ்திராபரணங்களைக் கழற்றி எறிந்து, தாழ்ந்த உடை தரித்து, புருஷனுடன் துஷ்ட மிருகங்கள் நிறைந்த காட்டை அடைந்தாள்.

| வரிசை எண் | எழுவாய் | எழுவாயைச் சாரும் பெயரெச்சத் தற்பிறவரல் | எழுவாயைச் சாரும் வேற்றுமைத் தற்பிறவரல் | பயநிலை | பயநிலையைச் சாரும் வினையெச்ச இடைப் பிறவரல் | பயநிலையைச் சாரும் வேற்றுமை இடைப் பிறவரல் | செயப்படுபொருள் | செயப்படு பொருளைச் சாரும் பெயரெச்ச இடைப் பிறவரல் | செயப்படு பொருளைச் சாரும் வேற்றுமை இடைப் பிறவரல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அரசன் | | கலிங்க தேசத்து | வென்ருன் | தூரத்தி | போரில் | அரசனை | | மாளவ தேசத்து |
| 2. | நாய் | 1. வர்த்தகன் வளர்த்த<br>2. பெரிய | | கடித்தது | | காவின்கண் | ஒரு கிழவியை | 1. குடிசையில்வசிக்கும்<br>2. வயதுசென்ற | |
| 3. | சீதாபிராட்டியார் | கற்புக்கரசியான | | அடைந்தாள் | 1. தான் அணிந்திருந்த உயர்ந்த வஸ்திராபரணங்களைக் கழிற்றி எறிந்து.<br>2. தாழ்ந்த உடைதரித்து | தன்புருஷனுடன் | காட்டை | துஷ்ட மிருகங்கள் நிறைந்த | |

1. தனவந்தன் ஒரு காட்டின்வழியே போகும்போது அவனைச் சில திருடர் அடித்து, அவனுடைய பணப்பையைப் பிடுங்கிக்கொண்டார்கள்.

2. விடா மழை பெய்ததனால், சில குரங்குகள், பறவைகள் கூடுகட்டி வாசம் செய்யும் ஒரு மரத்தின்கீழ் வந்து தங்கின.

3. ஓர் அடர்ந்த காட்டில் வானளாவிய ஒரு மரத்தின்கீழ் ஒரு புற்றில் ஒரு நல்ல பாம்பு வசித்து வந்தது.

4. ஆற்று நிறைய வெள்ளம் வர, மனிதர்களால் ஆற்றைக் கடக்க முடியாததனால், அங்கு வாழும் சில செம்படவர் தம் படகை ஆற்றில் செலுத்தினார்கள்.

5. அரசனின் இரு குழந்தைகளையும், சேவகர்கள் ஒரு கானகத்தில் கொண்டுபோய் விட்டுவிட, அவர்கள் பசியால் வருந்திக் குளிரினால் பரிதவித்து, இறந்துவிட்டனர்.

6. 'மொகலாயரின் ஆட்சியில் அக்பர் ஆட்சியே மேலானது' என்று நீங்கள் தேச சரித்திரத்தில் படித்திருக்கிறீர்கள்.

7. பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

8. ஆடு மாடுகளை மேய்த்துக்கொண்டு வடமேற்குக் கணவாய்களின் மூலமாய் வந்த ஆரியர் ஸிந்து கங்கா சமவெளி முழுதும் பரவினர்.

9. சூரியன் வெப்பத்தினால் பூமியில் உள்ள தண்ணீர் ஆவியாக மாறி மேலே செல்ல, அங்குக் குளிர் காற்று பட்டவுடன், மறுபடியும் தண்ணீராக மாறி மழையாகப் பெய்கிறது.

10. வண்ணான் துணிகளைத் தோய்த்து அவன் மனைவியிடம் கொடுக்க, அவள் அவற்றை வாங்கி உலரவைத்தாள்.

11. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் 'தன் மகன் சான்றோன்' எனக் கேட்ட தாய்.

12. ஆகிலும் நான் அப்படிச் செய்யாமல், அந்த மனிதன் திரும்பி வந்து கேட்டவுடனே, பணத்தைக்-கொடுத்துவிட்டேன்.

13. நீங்கள் சுண்ணம்பு போன்ற சரக்குகளைப் பரீட்சைக்கு அனுப்புவதானால், அவற்றைக் காற்று உள் போகாதபடி தகரடப்பாவில் நன்ருய் அடைத்து அனுப்ப வேண்டும்.

14. பின்பு பேபர், ஹுமாயூன் படுக்கைக்குப் பக்கத்தில் முழங்கால் படியிட்டுக் கடவுள் தம்மை எடுத்துக்கொண்டு மகனைக் காப்பாற்ற வேண்டும் என்று மிகுந்த ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினர்.

15. குடத்தைச் சாய்க்கும் பொழுது, குடத்திற்குள்ளிருக்கும் காற்று முன்போல் அவ்வளவு பலமாய் ஜலத்தை எதிர்க்க முடியாது.

16. நாம் சம்பாதிக்கும் பணத்தைக் காப்பாற்றி வைத்துக்கொள்வதற்குத் தபால் ஆபீஸில் சேவிங்ஸ் பாங்கி ஏற்பட்டிருக்கிறது.

17. சிலநாள் சென்றபின், அவன் தனக்குக் கிடைத்த பணத்தை எல்லாம் எடுத்துக்கொண்டு ஒரு தூரமான தேசத்துக்குப் போய், அங்கே குடிக்காரரோடும், சோம்பேறிகளோடும் சேர்ந்து, தன் ஆஸ்தி முழுதும் அழித்துவிட்டான்.

18. விகார ரூபமாய்க் காணப்படும் புழு வடிவமாகிய பட்டுப் பூச்சியிலிருந்து, அரசரும் ஆசைபடும் அழகான பட்டு உற்பத்தியாகிறது.

19. பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ் பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்து, நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.

20. 'செய்வன திருந்தச் செய்' என்று ஔவை அருளிச் செய்தார்.

**4. உன் புத்தகத்திலுள்ள சில வாக்கியங்களுக்குச் சொற்றொடர் பகுப்பிலக்கணங் கூறுக.**

**5. அடியிற் கண்ட செய்யுட்களுக்குச் சொற்றொடர் பகுப்பிலக்கணங் கூறு. (ஒரு செய்யுளில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்களும் உண்டு).**

1. அடக்கம் உடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா ;—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு.

2. சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் ;—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் (கண்டீர்) மரம்.

3. உற்ற விடத்தில் உயிர் வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ ? — கற்றூண்
பிளந்திறுவதல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.

4. தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர் ;—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று.

5. இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே !—பொன்செய்
ததிர்வளையாய் ! பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர் வரவால் பொங்கும் கடல்.

6. கல்லானே ஆனாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர் ;— இல்லானை
இல்லாளும் வேண்டாள் ; மற்றீன்றெடுத்த தாய்வேண்
செல்லா தவன்வாயிற் சொல். [டாள் ;

6. உன் செய்யுட்பாடத்தில் வந்துள்ள சில பாக்களுக்கும் சொற்றொடர் பகுப்பிலக்கணங் கூறுக.

## 2. சொல்லிலக்கணம்

1. அடியிற்கண்ட வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்களின் வகை : திணை, பால், எண், இடம், வேற்றுமை கூறுக :

1. பறவைகள் கூடுகளைக் கட்டி வசிக்கும்.
2. வேலன் இராமனுக்கு நண்பன்.
3. முருகனுடைய மகளுக்கு விவாகம் நடந்தது.
4. ஒரு மாதத்தில் முப்பது நாட்கள் உண்டு.
5. இக்கோயில் அரசனால் கட்டப்பட்டது.
6. வில்வித்தையில் சிறந்தவன் அர்ஜுனன்.
7. மக்காள் ! இந்நேரம் எங்கு சென்றிருந்தீர்கள் ?
8. எலிக்குப் பகை பூனை.

9. நங்காய் ! நீ உன் நெற்றியில் திலகம் இடு.
10. கோவிந்தன் வீட்டைக் கட்டினன்.
11. நான் சந்தைக்குப் போனேன்.
12. வண்ணன் கழுதையின்பின் போனன்.
13. இடையர்கள் நூறு ஆடுகளை மேய்த்தார்கள்.
14. நாய் வேடனுடன் ஓடிற்று.
15. ஒரு படி பால் வாங்கு.
16. அவன் வீட்டிலிருந்து வந்தான்.
17. நாங்கள் கஜம் பட்டு விலைக்கு வாங்கினோம்.
18. குறத்தி முறம் முடைகிருள்.
19. வேலன் குழந்தையுடன் விளையாடினன்.
20. நீங்கள் தோட்டத்திற்குப் போனீர்கள்.

**2.** தன்மைப் பெயர்களும், முன்னிலைப் பெயர்களும், சுட்டுப் பெயர்களும், வினப் பெயர்களும், எட்டாம் வேற்றுமையில் வரா.

**3.** அடியில் வரும் வினை முற்றுக்களின் திணை, பால், எண், இடம், காலம் முதலியன கூறுக:

(உ-ம்.)

1. மகிழ்ந்தான்: உயர்திணை, ஆண்பால், படர்க்கை, ஒருமை, இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று.

2. தீண்டுகின்றன: அஃறிணை, பலவின்பால், படர்க்கை, பன்மை, நிகழ்காலத் தெரிநிலை வினைமுற்று.

3. சென்றேன்: தன்மை, ஒருமை, இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று.

4. ஆரம்பிப்பீர்கள்: முன்னிலை, பன்மை, எதிர்காலத் தெரிநிலை வினைமுற்று.

5. பெரியவன்: உயர்திணை, ஆண்பால், குறிப்பு வினைமுற்று.

1. கூத்தாடினார்கள்.
2. அறிந்தாய்.
3. இடுவான்.
4. கெட்டவன்.
5. கூறினோம்.
6. பழையது.
7. சென்றது.
8. செய்பவன்.
9. வருந்துகிறோம்.
10. ஏவினாய்.
11. மீண்டோம்.
12. ஆளுவீர்கள்.
13. குனியாதே
14. சேர்கின்றது.
15. சூட்டினேன்.
16. கற்பிக்கிறார்கள்.
17. ஆலோசிப்பான்.
18. தெரிவிப்பேன்.
19. களித்தாய்.
20. இனியது.

4. உன் பாட புத்தகத்திலிருந்து அடியிற் கண்டவை தனித்தனி ஐந்து எடுத்து வரைக:

1. உயர்திணை, ஆண்பால், படர்க்கைத் தெரிநிலை நிகழ்கால வினைமுற்று.

2. உயர்திணை, பெண்பால், படர்க்கைத் தெரிநிலை எதிர்கால வினைமுற்று.

3. உயர்திணை, பலர்பால், படர்க்கைத் தெரிநிலை இறந்தகால வினைமுற்று.

4. அஃறிணை, ஒன்றன்பால், படர்க்கைத் தெரிநிலை நிகழ்கால வினைமுற்று.

5. தன்மை, பன்மைத் தெரிநிலை இறந்தகால வினைமுற்று.

6. முன்னிலை, ஒருமைத் தெரிநிலை நிகழ்கால வினைமுற்று.

7. உயர்திணை, ஆண்பால், குறிப்பு வினைமுற்று.

8. அஃறிணை, பலவின்பால், குறிப்பு வினைமுற்று.

**5. அடியிற் கண்ட வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்களுக்கும், வினைமுற்றுக்களுக்கும் இலக்கணம் கூறுக.**

1. வானத்தில் மேகங்கள் இருக்கின்றன.
2. கந்தன் மாட்டை அடிக்கிறான்.
3. நீ சுவாமியைத் தரிசித்தாய்.
4. அம்புஜம் குழந்தைக்குச் சாதம் ஊட்டினாள்.
5. நாம் காட்டுக்குப் போவோம்.
6. பசும் பால் குடி.
7. பிள்ளைகள் மாலையில் விளையாடினார்கள்.
8. நீங்கள் இங்கிருந்து பிரயாணம் செய்கிறீர்கள்.
9. நான் படத்தை எழுதுகிறேன்.
10. நீ ஏரியில் குளிக்கிறாய்.
11. சீதா! பாட்டுப் பாடு.
12. வேலன் கந்தனுடன் போனான்.
13. இடையர்கள் ஆடுகளை மேய்க்கிறார்கள்.
14. இராமன் மிகவும் நல்ல பையன்.
15. பங்கஜம்! புஷ்பம் பறி.
16. நான் நன்றாய்த் தூங்கினேன்.
17. முருகன் வைக்கோலால் கூரை வேய்ந்தான்.
18. நாம் பழங்களின் மேல் ஆசை பட்டோம்.
19. சிங்கம் மிருகங்களில் கம்பீரமானது.
20. நீங்கள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருப்பீர்கள்.

**6. கீழ்க்கண்ட வாக்கியங்களிலுள்ள சொற்களுக்குச் சொல்லிலக்கணம் கூறுக.**

நான் பெரிய யானையைக் கண்டு பயந்தேன்.

# IV. புணர்ச்சி

**1.** அடியிற் கண்ட புணர்ச்சிகளை நோக்குக. நிலைமொழிகளின் ஈற்றெழுத்துக்களும் அவற்றிற்கு அயலெழுத்துக்களும் யாவை?

1. மூக்கு + தூள் = மூக்குத் தூள்.
2. அச்சு + கூடம் = அச்சுக் கூடம்.
3. வாத்து + குஞ்சு = வாத்துக் குஞ்சு.
4. பட்டு + புழு = பட்டுப் புழு.
5. உப்பு + பயிர் = உப்புப் பயிர்.
6. சுற்று + புறம் = சுற்றுப் புறம்.

நிலைமொழி இறுதியில் 'கு', 'சு', 'டு', 'து', 'பு', 'று' வந்து அவைகளுக்கு அயலில் அதே மெய் வந்தால், புணரும்போது (அதாவது வன்றொடர்க் குற்றியலுகரத்தின் பின்) க, ச, த, ப மிகும்.

**2.** அடியிற்கண்ட சொற்றொடர்களில் வல்லினம் ஏன் மிகுந்தது?

1. முத்துப்பல்.
2. கணக்குப்பிள்ளை.
3. ஊற்றுப்பெருக்கு.
4. விளக்குத்தண்டு.
5. பாட்டுக்கச்சேரி.
6. பத்துப்பாட்டு.
7. நாற்றுக்கட்டு.
8. குத்துச்சண்டை.
9. பற்றுக் கோடு.
10. கொக்குக் கூண்டு.
11. சிட்டுக் குருவி.
12. நெருப்புக் கடவுள்.
13. முத்துக் கொட்டை.
14. செப்புத் தகடு.
15. எட்டுப் பேர்.
16. காற்றுப் பை.

**3.** அ, ஆ. இ என்னும் உயிர்களையும், ய் என்னும் மெய்யையும் இறுதியிலுடைய வினையெச்சங்களின் பின் க, ச, த, ப மிகும்.

(உ-ம்.)

போய் + பார்த்தான் = போய்ப் பார்த்தான்.
அழ + செய்தான் = அழச் செய்தான்.
செய்யா + சென்றான் = செய்யாச் சென்றான்.
தேடி + பார்த்தான் = தேடிப் பார்த்தான்.

**4.** அடியிற் கண்ட புணர்ச்சிகளை நோக்குக. நிலைமொழி இறுதியில் என்ன எழுத்துக்கள் இருக்கின்றன? அவற்றின் அயலில் என்ன எழுத்துக்கள் இருக்கின்றன? நிலைமொழிகள் எங்ஙனம் மாறுகின்றன?

1. குருடு + கண் = குருட்டுக் கண்.
2. வீடு + சுவர் = வீட்டுச் சுவர்.
3. ஆடு + மந்தை = ஆட்டு மந்தை.
4. ஓடு + வீடு = ஓட்டு வீடு.
5. சோறு + பானை = சோற்றுப் பானை.
6. ஆறு + நீர் = ஆற்று நீர்.
7. வயிறு + எரிச்சல் = வயிற்றெரிச்சல்.
8. திருநீறு + பதிகம் = திருநீற்றுப் பதிகம்.

வேற்றுமை யுருபு மறைந்திருக்கும் சொற்றொடர்களில் நிலைமொழி இறுதியில் டுகரமாவது றுகரமாவது வந்து, அதன்முன் ஒரு நெட்டெழுத்தாவது, ஒன்றுககு மேற்பட்ட குற்றெழுத்துக்களாவது வந்தால், முறையே டகர மெய்யாவது றகர மெய்யாவது இரட்டும்.

5. அடியிற்கண்ட சொற்றொடர்கள் எங்ஙனம் புணரும்? விதி கூறுக.

| | |
|---|---|
| 1. ஆடு + கால். | 9. கயிறு + கட்டில். |
| 2. மூடு + பூச்சு. | 10. துறடு + கோல். |
| 3. வயிறு + வலி. | 11. வேறு + மனிதன். |
| 4. சேறு + புண். | 12. மாடு + கொம்பு. |
| 5. முரடு + மனிதன். | 13. செவிடு + மனிதன். |
| 6. காடு + எருமை. | 14. உதடு + புண். |
| 7. ஞாயிறு + கிழமை; | 15. தவிடு + பானை. |
| 8. திருடு + பையன். | 16. நூறு + ஆண்டு. |

6. வெறு, குறு, நெடு, பெரு, அரு, கரு என்னும் சொற்களின் பின் க, ச, த, ப வந்தால் இனவெழுத்துத் தோன்றும்.

(உ-ம்.)

வெறு + பேச்சு = வெறும் பேச்சு.
குறு + தடி = குறுந் தடி.
நெடு + தூரம் = நெடுந் தூரம்.
பெரு + பொங்கல் = பெரும் பொங்கல்.
அரு + புதல்வன் = அரும் புதல்வன்.
கரு + தேள் = கருந் தேள்.

7. வெறு, குறு, சிறு, நடு, புது முதலிய சொற்களின் பின் உயிரெழுத்து வந்தால் நிலைமொழியிறுதியிலுள்ள உகரமேறிய மெய் இரட்டும்.

(உ-ம்.)

வெறு + இலை = வெற்றிலை.
குறு + ஏவல் = குற்றேவல்.

சிறு + ஊர் = சிற்றூர்.
நடு + ஆறு = நட்டாறு.
புது + உயிர் = புத்துயிர்.

8. பெரு, அரு, கரு என்னும் சொற்களின் பின் உயிரெழுத்து வந்தால் நிலைமொழியின் முதலெழுத்து நீளும்.

(உ-ம்.)

பெரு + இன்பம் = பேரின்பம்.
அரு + உயிர் = ஆருயிர்.
கரு + ஆடு = காராடு.

9. அடியிற்கண்டவற்றில் என்ன உயிரெழுத்து நிலைமொழி இறுதியில் (கடைசியில்) வருகின்றது? என்ன உயிரெழுத்து வருமொழி முதலில் வருகின்றது? என்ன மெய்யெழுத்து இடையில் தோன்றுகிறது.

முதல் வரிசை

1. மணி + அழகு = மணியழகு.
2. துணி + உலர்ந்தது = துணியுலர்ந்தது.
3. தீ + எரிந்தது = தீயெரிந்தது.
4. நீ + ஆடுகிறாய் = நீயாடுகிறாய்.
5. தயை + அதிகம் = தயையதிகம்.

இரண்டாம் வரிசை

1. பல + அரசர் = பலவரசர்.
2. நிலா + அழகு = நிலாவழகு.
3. திரு + அடி = திருவடி.
4. பூ + அறுத்தான் = பூவறுத்தான்.
5. பூ + அரசு = பூவரசு.

இ, ஈ, ஐ ஆகிய இம்மூன்று உயிருக்குப் பின் வருமொழி முதலில் உயிர் வந்தால், நடுவில் யகரமெல் தோன்றும்.

அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ ஆகிய இந்த உயிர் எழுத்துக் களின் பின் வருமொழி முதலில் உயிர் வந்தால், நடுவில் வகரமெய் தோன்றும்.

**10.** அடியிற்கண்ட புணர்ச்சிகளில் நிலைமொழி இறுதியில் என்ன உயிரெழுத்து இருக்கிறது? இடையில் என்ன மெய்யெழுத்து தோன்றுகிறது?

1. சே + அடி = சேவடி; சேயடி.
2. அவனே + அடித்தான் = அவனே யடித்தான்.
3. தே + ஆரம் = தேவாரம்.

நிலைமொழி இறுதியில் ஏகாரம் வந்து வருமொழி முதலில் உயிர் வந்தால், யகரமும் வகரமும் தோன்றும்.

இவ்விதம் தோன்றும் யகர, வகர மெய்களுக்கு உடம்படுமெய் (உடன்படுத்தும் மெய்) என்று பெயர்.

**11.** அடியிற்கண்ட சொற்களைக் கூட்டிச் சொல்லுக. இடையில் தோன்றும் எழுத்தையும் அதற்குக் காரணத்தையும் கூறுக.

1. தலை + எடுத்தான்.
2. பசு + ஓடிற்று.
3. தே + அடியான்.
4. பூ + அரசு.
5. புறு + அழகு.
6. பை + உலர்ந்தது.
7. பழி + அடைந்தது.

8. பருத்தி + அறுத்தான்.
9. கழுதை + உதைத்தது.
10. தீ + அணைந்தது.
11. தே + ஆலயம்.
12. பூச்சி + அடித்தது.
13. கோட்டையை + அழிந்தது.
14. கந்தை + இழந்தாள்.
15. எங்கே + அழுதான்.
16. பாட்டி + இளைத்தாள்.
17. கடா + ஆட்டம்.
18. மடு + அழகு.
19. படி + உடைந்தது.
20. பல்லி + ஒளிந்தது.

**12.** உன் புத்தகத்திலிருந்து யகர, வகர உடம்படுமெய்கள் தோன்றுவதற்குத் தனித்தனி ஐந்து உதாரணங்கள் தருக.

**13.** அடியிற் கண்ட சொற்கள் புணரும்போது என்ன விகாரங்கள் ஏற்படுகின்றன?

பொன் + நான் = பொன்னான்.
என் + நாடு = என்னாடு.
விண் + நாடு = விண்ணாடு.
எண் + நான்கு = எண்ணான்கு.

*நிலைமொழி இறுதியில் னகரமும் வருமொழி முதலில் நகரமும் வந்தால் னகரமாகத் திரியும்.*

*நிலைமொழி இறுதியில் ணகரமும் வருமொழி முதலில் நகரமும் வந்தால், ணகரமாகத் திரியும்.*

**14.** அடியில் வரும் சொற்கள் புணரும்போது நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் எப்படித் திரிகின்றன?

1. கல் + நெஞ்சம் = கன்னெஞ்சம்.
2. எள் + நெய் = எண்ணெய்.

நிலைமொழி இறுதியில் லகரமும் ளகரமும் வருமொழி முதலில் நகரமும் வந்தால், லகரமும் நகரமும் னகரமாகத் திரியும்; ளகரமும் நகரமும் ணகரமாகத் திரியும்.

**15.** அடியில் வரும் சொற்கள் புணரும்போது நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் எப்படித் திரிகின்றன?

1. கண் + நீர்.
2. வில் + நாண்.
3. கண் + நோய்.
4. பிள் + நாக்கு.
5. வெண்(மை) + நெய்.
6. உண் + நீர்.
7. பல் + நகம்.
8. சொல் + நலம்.
9. தண்(மை) + நீர்.
10. நன்(மை) + நெறி.

# மொழிப் பயிற்சி

## I. வாக்கிய வகை

**1. கீழ்க் கண்ட வாக்கியங்களின் தன்மையைக் கவனி :**

1. இராமன் வந்தான்.
2. இராமா ! வா.
3. இராமனா வந்தான் ?
4. இராமன் எவ்வளவு நல்லவன் !

(1) இராமன் வந்த செய்தியைத் தெரிவிக்கிறது.
(2) இராமனை வருமாறு கட்டளை இடுகிறது.
(3) கேள்வி கேட்கிறது.
(4) உணர்ச்சி உண்டாக்குகிறது.

**2. கீழ்க் கண்ட வாக்கியங்களின் தன்மையைக் கூறுக :**

1. காட்டில் மரங்களுண்டு.
2. வேடர் என்ன செய்கிறார்கள் ?
3. வேடர் பறவைகளைப் பிடித்தார்கள்.
4. பறவைகளின் குஞ்சுகள் பரிதவித்தன.
5. செய்வன திருந்தச் செய்.
6. ஐயோ ! கொடியவன் குழந்தையைக் கொன்றான்.
7. அவனா கொலை செய்தான் ?
8. புலையும், கொலையும், களவும் தவிர்.

9. கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு.
10. ஆஹா ! சுதந்திரதினக் கொண்டாட்டம் கண்கொள்ளாக் காட்சி.
11. விளையும் பயிர் முளையிலே.
12. சிச்சி! பிச்சைஎடுப்பதைவிட உயிர் விடுவதுநன்று:
13. இவ்வளவில் காணுங்கொல்?
14. சமூக சேவையே சிறந்த சேவை.
15. ஆவாரை யாரே அழிப்பர்?
16. கண்ணோட்டத்துள்ளது உலகியல்.
17. வீணனை ஏன் படைத்தாய்?
18. மாண்டார் வருவரோ?
19. பசித்தோர் முகம் பார்.
20. அந்தோ! என் வயிற்றெழுந்த பசி அடங்கிற்றில்லை.

விஷயத்தைத் தெரிவிக்கும் வாக்கியம் **செய்தி வாக்கியம்** எனப்படும்.

உத்தரவிடும் வாக்கியம் **கட்டளை வாக்கியம்** எனப்படும்.

கேள்வி கேட்கும் வாக்கியம் **வினா வாக்கியம்** எனப்படும்.

கோபம், விசனம், சந்தோஷம் முதலிய மனவெழுச்சிகளை உண்டாக்கும் வாக்கியங்கள் **உணர்ச்சி வாக்கியங்கள்** எனப்படும்.

**3. கீழ்க் கண்டவை தனித்தனி இன்ன வாக்கியம் என்று கூறுக. காரணமும் தருக.**

1. கல்வியிற் சிறந்ததொரு கைப்பொருளில்லை.
2. ஊரில் திருவிழா நடந்தது.
3. ஓடி விளையாடு பாப்பா !
4. அம்மம்ம ! என்னே பெரியோரின் உதாரகுணம்.

5. இன்னும் சர்க்கரை பஞ்சம் தீரவில்லை.
6. பாடசாலைகள் மூடப்பட்டன.
7. போரில் பலர் மாண்டனர்.
8. யுத்த காலத்தில் மக்கள் என்ன பாடுபட்டனர்!
9. யுத்தமில்லாமல் வாழ முடியாதா?
10. முதியோர்க்குப் படிக்கக் கற்பியுங்கள்.
11. மேகம் சூரியனை மறைத்தது.
12. கிழவரா ஆற்றை நீந்திக் கடந்தார்!
13. சிறுவன் நூல் நூற்றான்.
14. தீவினை யகற்று.
15. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ வன்சொல் வழங்குவது!
16. பசித்துப் புசி.
17. ஆஹா! ஆகாயவிமானம் எவ்வளவு துரிதமாகப் பறக்கிறது!
18. சிவ! சிவ! உயிரைக் கொல்வது எவ்வளவு பாவம்!
19. ஆலும் வேலும் பல்லுக்குறுதி.
20. அளவறிந்து அழித்துண்.

**4. அடியிற் கண்ட இரு வரிசை வாக்கியங்களையும் கவனி:**

| முதல் வரிசை | இரண்டாம் வரிசை |
| --- | --- |
| 1. மகன் உண்டான். | மகன் உண்டானில்லை. (உண்ணவில்லை.) |
| 2. மெல்லப் பேசு. | மெல்லப் பேசாதே. |
| 3. மகன் உண்டானா? | மகன் உண்ணவில்லையா? |
| 4. ஆஹா! அது எவ்வளவு அழகு! | ஆஹா! அது அழகுள்ளதல்லவா! |

முதல் வரிசையில் உள்ளவை உடன்பாட்டு வாக்கியங்கள்.

இரண்டாம் வரிசையில் உள்ளவை எதிர்மறை வாக்கியங்கள்.

**5. எனவே வாக்கியங்களின் வகை பின்வருமாறு :**

1. செய்தி { உடன்பாட்டு வாக்கியம். எதிர்மறை வாக்கியம்.
2. கட்டளை { உடன்பாட்டு வாக்கியம். எதிர்மறை வாக்கியம்.
3. வினா { உடன்பாட்டு வாக்கியம். எதிர்மறை வாக்கியம்.
4. உணர்ச்சி { உடன்பாட்டு வாக்கியம். எதிர்மறை வாக்கியம்.

**6. அடியிற் கண்ட வாக்கியங்கள் தனித்தனி என்ன வகை? செய்தி வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றுக. உடன்பாட்டு வாக்கியங்களை எதிர்மறையாகவும், எதிர்மறை வாக்கியங்களை உடன்பாட்டு வாக்கியங்களாகவும் மாற்றுக :**

1. கந்தன் கனாக் கண்டான்.
2. கருமமே கண்ணாயினார் கண் துஞ்சார்.
3. ஏழைகளின் பாடு என்ன பரிதாபம்!
4. ஆரே அனுபவிப்பார் அந்தப் பணம்?
5. மரம் பழுத்தால் வௌவாலைக் கூவி அழைப்பார் அங்கில்லை.
6. ஆஹா! லக்ஷதீபம் மிக்க அழகன்றோ!
7. வால் நட்சத்திரத்தைப்பற்றி நீ படித்ததில்லையா?

8. ஆழமறியாமற் காலையிடாதே.
9. தண்ணென் கதிர் வரவால் பொங்கும் கடல்.
10. சாவாரை யாரே தவிர்ப்பர்?
11. ஜாதி இரண்டொழிய வேறில்லை.
12. அம்மா! என்னேய் என்று தீருமோ!
13. நம்பினேரை மோசம் செய்யாதே.
14. மின்சாரத்தினல் இயந்திரங்கள் இயக்கப்படுகின்றன.
15. ஐயோ! என்னை மீட்பார் யாரும் இலரா?
16. வியன்னு நகரத்தில் முக்கியமான தொழில் யாது?
17. பாரிஸ் நகரத்தில் நல்ல பட்டாடைகள் வாங்கலாம்.
18. இருட்டில் விளக்கின்றி வெளியே செல்லாதே.
19. பாகிஸ்தானில் ஹிந்துக்கள் இல்லையா?
20. ஆஹா! எவ்வளவு பணம் செலவு செய்து எடுத்த படம் அது!

## II. வாக்கிய மாற்றம் – I.

**1. அடியிற் கண்ட வாக்கியங்களை ஒன்றுகச் சேர்க்க:**

(உ-ம்.) இராமன் வந்தான்; அவன் தகப்பனுருடன் பேசினன்.

இராமன் வந்து தகப்பனுருடன் பேசினன்.

1. கோவிந்தன் கடிதம் எழுதினன். அவன் அதைத் தபால் பெட்டியில் போட்டான்.
2. வள்ளி கடைக்குப் போனுள். அவள் ஒரு வீசை கத்தரிக்காய் வாங்கினுள்.

3. பக்தன் கோவிலை அடைந்தான். அவன் கடவுளைப் பூஜித்தான்.

4. வழிப்போக்கன் மரத்தடியில் தங்கினான். அவன் அங்குச் சற்றுநேரம் இளைப்பாறினான்.

5. பூனை, கோழிக் கூண்டுக்குள் நுழைந்தது. அது கோழிக் குஞ்சுகளைக் கொன்றது.

**2. அடியிற் கண்ட வாக்கியங்களை ஒன்றாகச் சேர்க்க:**

(உ-ம்.) குழந்தை கொஞ்சநேரம் ஆடிற்று. பிறகு அது தூங்கிவிட்டது.

குழந்தை கொஞ்சநேரம் ஆடினபிறகு தூங்கிவிட்டது.

1. கழைக்கூத்தன் ஒரு நீண்ட கழியை நட்டான். பிறகு அவன் அதன்மேல் கூத்தாடினான்.
2. மாடு வயிறு நிறையப் புல் மேய்ந்தது. அதன் பிறகு அது அசைபோட்டது.
3. குரங்கு வீட்டுக்குள் ஓடி வந்தது. உடனே கோபாலன் அதைத் துரத்தினான்.
4. கடைக்காரன் வேலனிடமிருந்து பணத்தை வாங்கிக்கொண்டான். பிறகு, அவன் வேலனுக்கு ஒரு புஸ்தகம் கொடுத்தான்.
5. பெருங் காற்று அடித்தது. அப்பொழுது பல மரங்கள் விழுந்துவிட்டன.
6. இரவில் ஜனங்களுக்கு வேலை இல்லை. ஆகையால் அவர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருப்பார்கள்.

## III. வழுச்சொற்களும், திருத்தமும்

**1. அடியிற் கண்டவற்றை சரியாகச் சொல்லப் பழகு :**

| தவறு | சரி | தவறு | சரி |
|---|---|---|---|
| ஊடு | வீடு | வளக்கு | விளக்கு |
| பொண் | பெண் | புத்து | புற்று |
| கைதை | கழுதை | காத்து | காற்று |
| வெண்டி | வண்டி | கொறவன் | குறவன் |
| கெத்தி | கத்தி | யாங் | ஏன் |
| கொடை | குடை | அவெங் | அவன் |
| கெத்திரிகாய் | கத்தரிக்காய் | அவொ | அவள் |
| மொறம் | முறம் | அவங்க | அவர்கள் |
| கொரங்கு | குரங்கு | எவங்க | எவர்கள் |
| கவுறு | கயிறு | நாங்க | நாங்கள் |
| வவுரு | வயிறு | நீங்க | நீங்கள் |
| பயம் | பழம் | அங்கெ | அங்கே |
| பளம் | பழம் | | அங்கு |
| கொயம்பு | குழம்பு | எங்கெ | எங்கே |
| கொளம்பு | குழம்பு | | எங்கு |
| கெய்வி | கிழவி | இங்கெ | இங்கே |
| கிளவி | கிழவி | | இங்கு |
| கெயங்கு | கிழங்கு | பொட்டி | பெட்டி |
| கிளங்கு | கிழங்கு | குடு | கொடு |
| கொளந்தை | குழந்தை | புடுங்கு | பிடுங்கு |
| கொயந்தை | குழந்தை | ஒன்றெ | ஒன்று |
| வெத்திலை | வெற்றிலை | பத்தெ | பத்து |
| தேத்தம் | தீர்த்தம் | அஞ்சி | அஞ்சு |
| தாத்தம் | தீர்த்தம் | | ஐந்து |
| ஆத்துக்கு | அகத்துக்கு | பாண்ணு | பதினைன்று |

**2. அடியிற் கண்டவற்றைச் சரியாகச் சொல்லப் பழகு; பொருளும் கூறுக.**

| 1-ம் வரிசை | 2-ம் வரிசை | 3-ம் வரிசை | 4-ம் வரிசை |
|---|---|---|---|
| கல் | கள் | மூலை | மூளை |
| வால் | வாள் | பில்லை | பிள்ளை |
| வெல்லம் | வெள்ளம் | உன் | உண் |
| குலம் | குளம் | என் | எண் |
| விலா | விளா | பானம் | பாணம் |
| புலி | புளி | கனம் | கணம் |
| சலி | சளி | பனி | பணி |
| வேலை | வேளை | மனை | மணை |
| கொல்லும் | கொள்ளும் | அரம் | அறம் |
| வலை | வளை | புரம் | புறம் |
| கலை | களை | உரி | உறி |
| காலை | காளை | கரை | கறை |
| சலி | சளி | திரை | திறை |

**3. அடியிற் கண்டவற்றைச் சரியாகச் சொல்லப் பழகு; சரியாக எழுதப் பழகு.**

| தவறு | சரி | தவறு | சரி |
|---|---|---|---|
| பல்லம் | பள்ளம் | பன்ரி | பன்றி |
| குல்லன் | குள்ளன் | கன்டான் | கண்டான் |
| வெல்லி | வெள்ளி | வன்டு | வண்டு |
| குள்ளாய் | குல்லாய் | கரன்டி | கரண்டி |
| சள்ளா | சல்லா | உருன்டை | உருண்டை |
| வெல்லாடு | வெள்ளாடு | யிலை | இலை |
| கின்னம் | கிண்ணம் | யீசன் | ஈசன் |
| கண்ணேய் | கண்ணேய் | யீட்டி | ஈட்டி |

| | | | |
|---|---|---|---|
| பின்ணுக்கு | பிண்ணுக்கு | வுடம்பு | உடம்பு |
| கன்ணுடி | கண்ணுடி | வுடுப்பு | உடுப்பு |
| பண்ணீர் | பன்னீர் | யெடு | எடு |
| கன்ரு | கன்று | யேணி | ஏணி |

**4. அடியிற் கண்டவற்றில் புள்ளியிட்ட இடங்களில் சரியான எழுத்துக்களை அமைக்க :**

1. இராமன் குதிரை வ....டியில் ஏறினன்.
2. பசுங்கன்.... பா.... குடித்தது.
3, ஒட்டன் ம.... சுவர் கட்டினன்.
4. விசிறி ப.... ஓலையால் செய்யப்படும்.
5. பன்னீர் செம்பிலிருந்து து....து....யாக விழுந்தது.
6. மனிதன் காலில் ஐந்து வி....ல்கள் இருக்கின்....ன.
7, ஒருநாளும் பொய் சொ........தே.
8. வீட்டுக்கு வெள்ளை அடிக்கச் சு....ணும்பு வாங்கு.
9. ஆற்று மணலைத் தோண்டினல் ஊற்றுத் த........ர் வரும்.
10. ....ப்பு இல்லாப் பண்டம் குப்பையிலே.
11. கத்தி ....ரும்பினல் செய்யப்பட்டது.
12. தலை வாராவிட்டால் ....ரும் பேனும் பிடிக்கும்.
13. கண்ணன் பு........ங்குழல் ஊதினன்.
14. அராபியர் பட்டம் பகலில் ஊரைக் கொ........ அடித்தார்கள்.
15. இளநீர் காய் தெ........மரத்தில் காய்க்கிறது.
16. எலுமிச்சம்பழம் உரு....டையாக இருக்கிறது.
17. வெ........ யைக் காய்ச்சினல் நெய் கிடைக்கும்.
18. ஓர் அ....வுக்குப் பன்னிரண்டு பை.
19. சீதை தூக்கத்தில் க.... கண்டாள்.
20. ஆறு ம....யில் உற்பத்தியாகிறது.

**5. அடியிற் கண்டவற்றைச் சரியாகச் சொல்லப் பழகு; எழுதப் பழகு.**

| ஸ | ஜ | ஷ | க்ஷ | ஹ |
|---|---|---|---|---|
| ரஸம் | ஜலம் | விஷம் | பக்ஷம் | ஹரி |
| வாஸம் | விஜயம் | விஷயம் | பக்ஷணம் | ஹரன் |
| மாஸம் | அம்புஜம் | பாஷாணம் | பக்ஷி | தேஹம் |
| ரஸ்தா | கஜம் | ஸேஷாசலம் | சாக்ஷி | ஹிந்து |
| விஸ்தாரம் | ராஜா | ரிஷி | க்ஷேமம் | ஹிமயமலை |
| கஸ்தூரி | ரோஜா | போஷி | க்ஷேத்திரம் | ரஹிமான் |
| ஸேனாதிபதி | கூஜா | அபிஷேகம் | பிக்ஷை | ஹேது |
| ஸுந்தரம் | ஜோஸ்யம் | பாஷை | சிக்ஷை | ஹிம்சை |
| ஸௌக்கியம் | ஜுரம் | ஷேக்ஸ்பியர் | தக்ஷிணம் | ஹநுமான் |
| தாஸர் | ஜூன் | ஷோலாபூர் | இராக்ஷஸன் | ஹௌரா |
| வியாஸர் | ஜூலை | த்ராஷி | க்ஷௌரம் | மஹிமை |
| ஸ்திரீ | மேஜை | விஷ்ணு | கக்ஷி | மஹேந்திரன் |
| பாரஸீகம் | பூஜை | சந்தோஷம் | பரீக்ஷை | விதேஹம் |

**6. அடியிற் கண்டவற்றில் புள்ளியிட்ட இடங்களில் சரியான எழுத்தை அமைக்க.**

1. ஜுரம் வந்தால் க........யம் சாப்பிடு.
2. பலபேர் கொண்டது ....னக்கூட்டம்.
3. மல் யுத்தம் செய்பவன் பு....ங்களைத் தட்டினான்.
4. வேளாளன் சந்தையில் தரிப்பதற்கு வே....டிகளை வாங்கினான்.
5. காஞ்சீபுரம் ஒரு புண்ணிய ....த்திரம்.
6. நடிகர்கள் வே....ம் தரித்து நடிக்கிறார்கள்.
7. காட்டில் மரங்கள் விசே....ம்.
8. இராவணன் ஒரு இரா....சன்.

9. ஆறு ஆயிரம் ஒரு ல....ம் ஆகும்.
10. இராமர் கோவிலிலிருந்து ப....ணே ஊர்வலம் வருகிறது.
11. ஜீவ....ம்சை செய்யாதே.
12. இரவில் ஆகாயத்தில் ந....த்திரங்கள் பிரகாசிக்கின்றன.
13. ஆங்கில வருஷத்தில் முதல் மாதம் ....னவரி.
14. மனிதன் இழுக்கும் வண்டிக்கு ரிக்.... என்பது பெயர்.
15. அழகு என்றாலும் இல....ணம் என்றாலும் ஒன்று.
16. டிசம்பர் மாதம் கிரு....மஸ் பண்டிகை வரும்.
17. காங்கிரஸ் க....த்தலைவர் யார்?
18. பாலாறு மை....ரில் உற்பத்தியாகிறது.
19. ....தராபாத்தை ஒரு நவாப் ஆண்டார்.
20. ஆலவிரு....ம் அதிக நிழல் தரும்.

**7. அடியில் கோடிட்ட விடைகளுக்கு ஏற்ற கேள்விகள் தருக:**

1. தகப்பனார் <u>வியாபாரம்</u> செய்கிறார்.
2. நான் <u>காவனூரில்</u> வசிக்கிறேன்.
3. எனக்கு <u>நீந்தத்</u> தெரியாது.
4. எனக்கு <u>இரண்டு</u> சகோதரர் இருக்கிறார்கள்.
5. நான் <u>மாலையில்</u> விளையாடுவேன்.
6. நான் <u>சிங்கத்தைப்</u> பார்த்தது இல்லை.
7. கோபாலன் <u>பாடுவதில்</u> சமர்த்தன்.
8. சென்னை ஒரு <u>பெரிய</u> நகரம்.

9. சென்னைக்கு வடக்கில் கல்கத்தா இருக்கிறது.
10. கிழவன் தள்ளாடித் தள்ளாடி நடக்கிறான்.
11. ஆறு மலையிலிருந்து சமுத்திரத்திற்கு ஓடுகிறது.
12. புகை வண்டி நீராவியினால் ஓடுகிறது.
13. தச்சன் மகனுக்குத் தன் வேலையைக் கற்பித்தான்.
14. பிச்சை எடுப்பதைக் காட்டிலும் இறப்பது நல்லது.
15. நியாயாதிபதியின் வீட்டுக்கு இரண்டு வாலிபர் வந்தனர்.

**8. அடியிற் கண்ட மொழிகளின் பொருள்கள் யாவை?**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பாணம், | பானம். | 6. மணை | மனை. |
| 2. | மணம், | மனம். | 7. கணை, | கனை. |
| 3. | ஆணி, | ஆனி. | 8. கண்ணி, | கன்னி. |
| 4. | பணி, | பனி. | 9. ஆணை, | ஆனை. |
| 5. | கன்னன், | கண்ணன். | 10. பேண், | பேன். |

**9. கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட விடங்களில் மேற்கண்டவற்றிலிருந்து சரியான மொழியை ஏற்றபடி மாற்றி அமைக்க**

1. திருவிழாவில் ——— வேடிக்கை காணலாம்.
   தாகம் எடுத்தால் ——— செய்கிறோம்.
2. நல்ல ——— தையுடைய மனிதன் துஷ்ட காரியங்களைச் செய்யமாட்டான்.
   நல்ல ——— தையுடைய மலரை நாம் விரும்புகிறோம்.

3. சுவரில் ——— அடித்துத் தொப்பி மாட்டு.
——— மாதம் மேல் காற்று வீசும்.

4. தந்தை தாய் ———
ஈ, எலி ———, தவிர்.

5. ஐயர் ——— மேல் உட்கார்ந்தார்.
புது ——— யில் நாங்கள் குடி புகுகிறோம்.

6. மார்கழி மாதம் ——— பெய்யும்.
பெரியோரிட்ட——— யை உடனே செய்ய வேண்டும்.

7. வேடன் புருவின்மேல் ——— எய்தான்.
குதிரை எஜமானனைக் கண்டதும் ——— த்தது.

8. வேடன் ——— வைத்துப் பக்ஷிகளைப் பிடித்தான்.
கோபாலன் ——— யை மணந்தான்.

9. அரசனுடைய ——— யை மீறலாகாது.
காட்டில் ——— வசிக்கும்.

10. கிருஷ்ணனுக்குக் ——— என்றும் பெயர்.
——— குந்தியின் மூத்த குமாரன்.

**10. அடியிற் கண்ட மொழிகளின் பொருள்கள் யாவை?**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | வாள், | வால். | 6. | சளி, | சலி. |
| 2. | கோளம், | கோலம். | 7. | புளி, | புலி. |
| 3. | பள்ளி, | பல்லி. | 8. | காளை, | காலை. |
| 4. | விளா, | விலா. | 9. | பிள்ளை, | பில்லை. |
| 5. | விளை, | விலை. | 10. | தவளை, | தவலை. |

**11. கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட விடங்களில் மேற்கண்டவற்றிலிருந்து சரியான மொழியை ஏற்றபடி மாற்றி அமைக்க.**

1. கிணற்றுத்——க்கு நாட்டு வளப்பம் தெரியுமா?
   கண்ணன் செம்பினுல் —— செய்கிறுன்.
2. எலுமிச்சம்பழம் —— ப்பாய் இருக்கும்.
   காட்டில் —— வாழும்.
3. —— ம்பழம் உருண்டையாய் இருக்கும்.
   மார்பின் இருபக்கங்களிலும் —— எலும்புகள் இருக்கின்றன.
4. முற்பகல் செய்தால் பிற்பகல் —— யும்.
   அந்தப் புத்தகத்தின் —— ஐந்து அணு.
5. உங்கள் —— யில் எத்தனை மாணவர் வாசிக்கின்றனர்?
   —— ஒணுன் இனத்தைச் சேர்ந்தது.
6. மகன் வேலை செய்து —— த்தான்.
   குளிர்காலத்தில் பலருக்கு —— பிடிக்கிறது.
7. கந்தன் சந்தையில் இரண்டு —— களை வாங்கினுன்.
   உழவன் —— யில் எழுந்து வயலுக்குப் போனுன்.
8. பூமி ஒரு ——.
   பெண்கள் —— இடுகிருர்கள்.
9. கீரியின் குட்டிக்கு —— என்று பெயர்.
   சந்தனம் —— களாக் விற்கப்படுகிறது.
10. மரத்தை —— கொண்டு அறு.
    நாய் மகிழ்ச்சியடைந்தால் —— ஆட்டும்.

**12. அடியிற் கண்ட மொழிகளின் பொருள்கள் யாவை ?**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. அரம், | அறம். | 6. துரை, | துறை. |
| 2. புரம், | புறம். | 7. கரி, | கறி. |
| 3. மரி, | மறி. | 8. கரை, | கறை. |
| 4. கருப்பு, | கறுப்பு. | 9. தரி, | தறி. |
| 5. பரி, | பறி. | 10. எரி, | எறி. |

**13. அடியிற் கண்ட வாக்கியங்களில் கோடிட்டவிடங்களில் மேல்கண்டவற்றிலிருந்து சரியான மொழியை அமைக்க :**

1. காஞ்சீ ——— த்தில் பல கோவில்கள் உள்ளன.
   நகர்ப் ——— த்தில் மாளிகைகளைக் காணலாம்.
2. ஆற்றின் ——— யில் சோலைகள் இருக்கின்றன.
   துணியில் சில ——— கள் பட்டால் போவதில்லை.
3. பைத்தியக்காரன் மலைமீதிருந்து குதித்து ——— த்தான்.
   திருடன் வழிப்போக்கனை ——— த்தான்.
4. வழிப்போக்கன் பணத்தை ——— கொடுத்தான்.
   திருடன் பணத்தால் ——— வாங்கினான்.
5. கனவானை ——— என்கிறோம்.
   ஆற்றின் ——— யில் படிகள் இருக்கின்றன.
6. ——— யைத் தூள்செய்து பல் விளக்கு.
   கோடைக்காலத்தில் காய் ——— களின் விலை அதிகம்.
7. ஸ்திரீகள் சேலை ——— க்கிறார்கள்.
   சேலை ——— யில் நெய்யப்படுகிறது.

8. துஷ்டன் குடிசைமேல் கொள்ளி ______ ந்தான்.
குடிசை பற்றி ______ ந்தது.

9. காகம் ______ நிறம்.
______ காலத்தில் ஜனங்கள் பசியால் வருந்து கின்றனர்.

10. தட்டான் ______ கொண்டு காப்பை ராவினன்.
நாம் ______ செய்தால் மோக்ஷம் அடைவோம்.



**14. கீழ்க் கண்ட மொழிகளைக் கொண்டு வாக்கியங்களைப் பூர்த்தி செய்க:**

| | | | |
|---|---|---|---|
| விகாரமாக | வால் | ஆட்டின் | இனிப்பாய் |
| இருட்டிலும் | எலி | பசு | தாவித்தாவி |
| பாலைநிலம் | கொட்டைகளை | மனிதனை | புல்பூண்டு |

1. ______ வால் குட்டையாய் இருக்கும்.
அது ______ ______ தின்னும்.

2. ______ பால் தரும்.
பால் ______ இருக்கும்.

3. ஒட்டகம் பார்வைக்கு ——— இருக்கும்.
அது ——— கடக்க உதவும்.

4. பூனைக்கு ——— கண் தெரியும்.
அது ——— பிடிக்கும்.

5. குரங்கு ——— போல் இருக்கும்.
ஆனால் அதற்கு ஒரு ——— உண்டு.

6. அணில் ——— தின்னும்.
அது மரங்களில் ——— ——— குதிக்கும்.

**15. அடியிற் கண்ட வாக்கியங்களில் புள்ளி இட்ட விடங்களில் சரியான எழுத்தை அமை :**

1. ஒரு குயவன் சூ... போட்டான்.
2. வா...யன் செக்கு ஆடுகிறான்.
3. கட்டையை எரித்தால் க... ஆகும்.
4. தே...க்கள் ரீங்காரம் செய்யும்.
5. துஷ்ட பையன் முடவனைக் கே... செய்தான்.
6. குறவன் மு...ம் விற்றான்.
7. அர்ஜுனன் வில் வ...த்தான்.
8. மிளகாய் கா...மாய் இருக்கும்.
9. மாட்டுச் சா...ம் நல்ல எருவாகும்.
10. ப...ப்பழம் சுரசுரப்பாய் இருக்கும்.
11. பனை யோலையால் விசி... செய்யலாம்.
12. ச...க்கிழமை பள்ளிக்கூடம் இல்லை.
13. தாயார் கதவைத் தி...ந்தாள்.
14. குருடன் வீ... வாசித்தான்.
15. குழந்தை ஒரு கவ...ம் சோறு தின்றது.
16. கோவிந்தன் இராத்திரி தூக்கத்தில் க... கண்டான்.

17. இராமன் ஆற்றில் கு...த்தான்.
18. மாமியார் சொற்படி ம....மகன் நடக்கிறான்.
19. ஓர் ஊரில் ஒரு ப...க்காரன் இருந்தான்.
20. மந்தமான பையன் பாடத்தை ம...ந்தான்.
21. சுண்டெலி வ... தோண்டிற்று.
22. மழை பெய்வதற்கு மலைகள் அ...கூலமாய் இருக்கின்றன.
23. தெருக்கள் குப்பை கூ...மின்றி இருக்கவேண்டும்.
24. கோ...ப்பை மூட்டை கட்ட உதவும்.
25. மலையா....த்தில் கொப்பரையிலிருந்து எ . ...ய் எடுத்து சோப் செய்கிறார்கள்.

**16. கீழ்க்கண்ட வாக்கியங்களைத் தவறாமல் வேகமாகப் பலமுறை திரும்பத் திரும்பச் சொல்லப் பழகு; தவறில்லாமல் எழுதவும் பழகு.**

1. களத்தூர் வேளாளன் பள்ளூரில் கொள் விளைவித்துத் தெள்ளூரில் பள்ளி இளைஞரை விளித்து அள்ளி அள்ளி அளித்துக் களித்தான்.
2. கோலார் கொல்லன் பாலாற்றில் நிலவில் மெல்லிய வேலாயுதம் சலியாது பல பல செய்து மலிவாக விலைக்கு வலிய விற்று மெலிந்து நலிந்தான்.
3. இருளன் காலை வேளையில் சோலைக்குள் வளையில் எலியைக் களைந்து பல்லாவில் ஒளித்து வில் வளைத்து வல்லூறுகளைத் தொலைத்து பல்லை இளித்துக் கலகலவென்று ஒலித்துச் சிரித்தான்.
4. கண்ணன் விண்ணாட்டை அண்ணாந்து காணக் கோணிய ஏணி மேல் வீணை அணிந்து பண் கொண்ட சாணான் நாணாற்றுப் பணிந்தான்.

5. மன்னன் அன்னை சொன்ன கனவை நினைத்து நினைத்து யானை சுனையூர் அனுதை மனிதனைத் தனியாகக் கவனித்து மன்னித்தான்.

6. ஒணுன் காணுற்றில் வண்ணுன் பானையில் துணிந்து தனியே நுழைந்து கணையாழியை முனைந்து அணிந்து மனையில் வந்து சாணியில் ஒளிந்தது.

**17. படியாதவன் பேசுவதுபோல் கீழ்க்கண்ட வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைச் செந்தமிழில் சொல்லவும் :**

1. கொய்ந்தெ அய்வுது.
2. வெண்டியிலெ ஒம்பது பேர் கீராங்க.
3. மணி தூத்தம் குடிசான்.
4. கடையிலிருந்து வாளபளம் வாங்கி வா.
5. வைத்தியர் வவுத்து நோவுக்கு மருந்துகொடுத்தார்.
6. எங்க அண்ணெ ! வஞ்சி.
7. அவா ஆத்துக்கு போயிட்டாளே.
8. அவாளெ இட்டுகிட்டு வா.
9. கொறத்தி மொறம் விக்கிறு.
10. பொட்டி நெறைய துணிவை.
11. தங்கம், வெல்லிகெய்ங்கு தின்ணு.
12. வேலன் கெத்தியெ கெல்லு மேல தீட்ணு.
13. ஒட்டன் பல்லம் வெட்ணு.
14. மொளகா ரொம்ப காரமா கீது.
15. ஒரு பைசாவுக்கு பன்ரெண்டுவெத்திலெ கெடைக்கும்
16. பக்கத்து வூட்ளெ கண்ணுலம் நடக்குது.
17. முனியன் கோட்டிலே சாச்சி சொன்ணு.
18. ஒங்க ஊர்லெ என்ன விசேஸம் ?
19. எல்லாம் சேமமா கீராங்களா ?
20. நாயித்துக் கிழமை சாயங்காலம் ராவுகாலம்.



## IV. சொற்பொருத்தம்

**1. இந்த வார்த்தைகளைக் காலியான இடங்களில் அமைக்க :**

கருமை ஊதா சிவப்பு வெண்மை மஞ்சள் பச்சை

1. பால் ______ நிறமானது.
2. இரத்தம் ______ நிறமானது.
3. பொன் ______ நிறமானது.
4. ஆகாயம் ______ நிறமானது.
5. காகம் ______ நிறமானது.
6. இலை ______ நிறமானது.

**2. கீழ்க் கண்ட வாக்கியங்களைப் பூர்த்தி செய்க. வாக்கியங்களை மேல் கண்டபடி மாற்றி அமைக்க :**

1. ______ புஷ்பத்தின் நிறம் சிவப்பு.
2. ______ புஷ்பத்தின் நிறம் மஞ்சள்.
3. ______ புஷ்பத்தின் நிறம் ஊதா.
4. ______ புஷ்பத்தின் நிறம் வெண்மை.
5. ______ பழத்தின் நிறம் மஞ்சள்.
6. ______ காயின் நிறம் பச்சை.



3. இந்த மொழிகளை அடியிற் கண்ட வாக்கியங்களில் அமை :

அகவுகிறது கத்துகிறது

கூவுகிறது கனைக்கிறது

குரைக்கிறது உறுமுகிறது

1. பன்றி ______
2. பூனை ______
3. நாய் ______
4. மயில் ______
5. குதிரை ______
6. சேவல் ______




4. எண் இடப்பட்ட பாகங்களுக்குத் தனித் தனி கீழ்க்கண்ட பெயர்களில் எது பொருந்தும்? ஒவ்வொன்றையும்பற்றி இரு வாக்கியங்கள் கூறுக.

மூக்கு தாழ்ப்பாள் காது மூடி கழுத்து கண்
இதழ் கால் பிடி பற்கள் காம்பு மணி



5. இந்தப் படங்கள் பருத்தி துணி ஆகும் வரையில் அடையும் நிலைகளைக் காட்டுகின்றன.

பருத்தி நூல் துணி

6. அடியிற் கண்டவை அடையும் நிலைகளில் கோடுள்ள இடத்தைப் பூர்த்தி செய்:

1. நெல் ———— சாதம்.
2. கடலைக்காய் ———— எண்ணெய்.
3. ஏரி மண் ———— சுவர்.
4. மரம் ———— மனை.
5. மூங்கில் ———— கூடை.
6. இரும்பு ———— பெட்டி.
7. முட்டை ———— பறவை.
8. பூ ———— பழம்.
9. குழந்தை ———— கிழவி.
10. பாலேடு ———— நெய்.

7. ஒவ்வொரு ரூபத்தைப்பற்றி இரண்டொரு வாக்கியங்கள் கூறி மூன்று ரூபங்களையும் சம்பந்தப் படுத்துக.



**8. இரண்டாம் வாக்கியத்தை முதல் வாக்கியத்தின் பொருள்வர அமை :**

1. இராமன் காட்டைச் சேர்ந்தான்.
   இராமன் காட்டை (பார்த்தான், அடைந்தான், விரும்பினான்.)

2. ஒரு நாட்டில் ஓர் அரசன் இருந்தான்.
   ஒரு (கிராமத்தில், நகரத்தில், தேசத்தில்) ஓர் அரசன் இருந்தான்.

3. பாகன் யானையை ஆற்றுக்கு ஓட்டினான்.
   பாகன் யானையை (ஏரிக்கு, நதிக்கு, மலைக்கு) ஓட்டினான்.

4. பெற்றோரும் குழந்தைகளும் சுகமாக வாழ்கிறார்கள்.
   பெற்றோரும் குழந்தைகளும் (வருத்தமாக, இஷ்டமாக, சௌக்கியமாக) வாழ்கிறார்கள்.

5. வண்டி விரைவாகப் போயிற்று.
   வண்டி (வேகமாக, மெதுவாக, நிதானமாக)ப் போயிற்று.

**9. எதிர் மொழிகளை உபயோகி :**

1. நாம் பகலில் வேலை செய்கிறோம். (இரவில், மாலையில், நடுப்பகலில்) தூங்குகிறோம்.
2. தனவந்தர் (மூடவர்களை, வறிஞர்களை, ஸ்திரீகளை) காப்பாற்ற வேண்டும்.
3. பட்டு மிருதுவாய் இருக்கிறது : இரும்பு (கருமையாய், அழகாய், கடினமாய்) இருக்கிறது.
4. சில பிள்ளைகள் பாடசாலைக்கு நிரம்ப தூரத்தில் வசிக்கிறார்கள்; மற்றவர் (பக்கத்தில், எதிரில், அண்மையில்) வசிக்கிறார்கள்.
5. இரண்டு குரங்குகள் மரத்தின்மேல் தங்கின; இரண்டு மரத்தின் (நுனியில், அடியில், அண்டையில்) தங்கின.
6. மலையின்மேல் நடப்பது கஷ்டம்; மைதானத்தில் நடப்பது (உல்லாசம், சிரமம், எளிது.)
7. உழவன் மாடுகளை அடைந்தான்; அவன் அவற்றை (இழந்தான், துரத்தினான், கொடுத்தான்).
8. கிழவன் உடைகள் தூய்மையாய் இருக்கின்றன. கிழவியின் உடைகள் (பளபளப்பாய், அழுக்காய், வேடிக்கையாய்) இருக்கின்றன.
9. சுத்தமான பிள்ளைகள் லக்ஷணமாய் இருக்கிறார்கள். அசுத்தமான பிள்ளைகள் (அவமானமாய், அவலக்ஷணமாய், அற்பமாய்) இருக்கிறார்கள்.
10. சன்மார்க்கன் பெரியோர் சொல்படி நடப்பான். (மூடன், கர்வி, துன்மார்க்கன்) அவ்விதம் நடக்கமாட்டான்.

**10. அடியிற் கண்ட வாக்கியங்களில் தடித்த எழுத்து மொழிகளுக்குப்பதில் வேறுமொழிகளை அமைக்க: பொருள் மாருமல் பார்த்துகொள்க:**

1. சிறுவன் வைக்கோலின் மேல் **உறங்கினுன்.**
2. **தனவந்தன்** பெரிய **மாளிகையில்** வசித்தான்.
3. **தலைவன் ஆடைகளை** அணிந்தான்.
4. மூன்று **தினங்கள் கழிந்தன.**
5. மஹமதியன் **ஆனந்தம் அடைந்தான்.**
6. ஒரு **பறவை ஆகாயத்தில்** பறந்தது.
7. நோயாளி மிகவும் **வருந்தினுன்.**
8. இரண்டு **அரசரும் போர் புரிந்தார்கள்.**
9. ஏழை **உணவின்றி மெலிந்தான்.**
10. **பாடகன்** கடைக்குப் போய் **மீண்டான்.**
11. ஒரு **மனிதன் துரிதமாகப்** போனுன்.
12. இரு **நண்பர் அயல்நாட்டுக்குச்** சென்றனர்.
13. ஒருவன் மற்றவனுக்குத் **திரவிய சகாயம் செய்தான்.**
14. **பிரயாணி** தண்ணீர் **அருந்தினுன்.**
15. **தந்தை தநயனுக்குப்** புத்தி **புகட்டினுன்.**
16. **பர்வதங்களி**லிருந்து நதிகள் **உற்பத்தியாகின்றன.**
17. **கோடைகாலத்தில்** பெருங்காற்று **வீசும்.**
18. பூக்களில் **நறுமணம் கமழும்.**
19. நான்கு **கள்வர்** நடு நிசியில் வீட்டில் **புகுந்தனர்.**
20. மாங்கனி நற் **சுவையை உடையது.**

**11. அடைப்புக் குறிகளுக்குள் உள்ள மொழிகளில் சரியானவற்றைக்கொண்டு இக் கதையை எழுதுக:**

ஒருநாள் ஓயாத (மழை, வெயில், காற்று) பெய்து கொண்டு இருந்தது. குரங்குகள் மழையில் (உலர்ந்து,

நனைந்து, வாடி) கொண்டு ஓடிவந்தன; அவை ஒரு மரத்தின் அடியில் (ஏறின, படுத்தன, தங்கின); மரத்தின்மேல் சில தூக்கண (விலங்குகள், குருவிகள், பூச்சிகள்) கூண்டுகளில் நனையாமல் உட்கார்ந்து இருந்தன. அவை குரங்குகளைப் பார்த்து, 'அண்ணன்மாரே, நீங்களும் எங்களைப் போல் வீடுகளைக் கட்டிக்கொண்டு இருந்தால் மழையில் நனையாமல் (அலக்ஷியமாக, அன்பாக, சுகமாக) அவற்றில் தங்கி இருக்கலாம் அல்லவா? உங்களுக்குக் (கைகள், நகங்கள், கால்கள்) இருந்தும் நீங்கள் அவற்றை உபயோகித்து வீடுகளைக் கட்டிக்கொள்ள வில்லையே!' என்று (பாடின, விசனப்பட்டன, சந்தோஷப்பட்டன). குரங்குகளுக்குக் கோபம் (உண்டாயிற்று, அதிகமாயிற்று குறைந்தது). மழை நின்றவுடன் அவை மரத்தின் மேல் (இறங்கி, ஏறி, நின்று) கூண்டுகளை எல்லாம் பிய்த்து எறிந்துவிட்டன.

II

1. குரங்குகள் ஏன் மரத்தடியில் வந்து தங்கின?
2. மரத்தில் எவை இருந்தன? எங்கே இருந்தன?
3. அவை குரங்குகளுக்கு என்ன சொல்லின?
4. குரங்குகள் என்ன செய்தன?

**12. கீழ்க்கண்ட மொழிகளைக் கொண்டு வாக்கியங்களைச் சரியாக அமை:**

1. கூண்டுகளில், மேல், இருந்தன, தூக்கணங்குருவிகள், மரத்தின், சில, உட்கார்ந்து.
2. நனையாமல், அல்லவா, நீங்களும், சுகமாக, அவற்றில், மழையில், இருக்கலாம், தங்கி?
3. பிய்த்து, எல்லாம், எறிந்து, அவை, மேல், மரத்தின், கூண்டுகளை, ஏறி, விட்டன.



## 13. உடைகள்.

1. ஆண்கள் அரையில் ______ அணிகிறார்கள்.
2. சிறுமிகள் அரையில் ______ அணிகிறார்கள்.
3. பெண்கள் அரையில் ______ அணிகிறார்கள்.
4. உடைகளை ______ துவைக்கவேண்டும்.
5. ______ உடைகள் விலை சரசம்.
6. ______ உடைகள் வெம்மை யானவை.
7. போலீஸ்காரன் ______ அணிந்திருக்கிறான்.
8. நாம் பாதத்துக்கு ______ அணிகிறோம்.
9. சிறுவர் தலையில் ______ அணிகிறார்கள்.
10. சிறுமியர் தலையில் ______ அணிகிறார்.

### II

1. உனக்கு எப்படி உடுக்கவேண்டுமென்று விருப்பம்?
2. நீ இப்பொழுது என்ன உடுத்து இருக்கிறாய்? விவரி.
3. பலர் ஒரேவிதமான உடைகளை (Uniform)-த் தரிக்கும் வகுப்பினர் சிலரைக் கூறுக.
4. ஏன் அவர்கள் அவ்விதம் தரிக்கிறார்கள்?

## V. நிறுத்துக் குறிகள்

1. முற்றுப்புள்ளி ஒரு செய்தி வாக்கியத்தின் கடைசியில் வரும். அங்கு நான்கு கைந்நொடிப் பொழுது நிறுத்த வேண்டும்.

(உ-ம்.) அவன் வந்தான்.

2. கேள்விக் குறி கேள்வி கேட்கும் சொல் அல்லது தொடரின் பின்வரும். ஆச்சரியக் குறி ஆச்சரியம் காட்டும் வாக்கியங்கள், விசனம், சந்தோஷம் காட்டும் இடைச் சொற்கள் இவற்றின் பின் வரும். அச்சொற்றொடர்களைச் சொல்லி முடிக்கும் சமயத்தில் குரலில் ஏற்ற மாறுதல் தேவை.

(உ-ம்.) நீ வந்தாயா? ஐயோ! அவன் இறந்தானே!

3. காற்புள்ளி (,) பல பெயர்கள், வினைகள், எச்சங்கள், அல்லது சொற்றொடர்களோ அடுக்கி வந்தால் அவற்றிற்கு மத்தியில் வரும். அங்கு ஒரு கைந்நொடிப் பொழுது நிறுத்தவேண்டும்.

(உ-ம்.) இராமன், கண்ணன், கோவிந்தன் வந்தார்கள்.
ஸ்நானம்செய்து, மலையேறி, ஸ்வாமி தரிசனம்செய்து, அவர்கள் வீடு திரும்பினார்கள்.

4. யாராவது பேசினதைக் குறிப்பதற்கு அதற்கு ஆரம்பத்திலும் முடிவிலும் “ ” இக் குறிகள் இடுவது. இவற்றிற்கு மேற்கோள் குறிகள் என்று பெயர்.

5. செய்தி வாக்கியத்தின் கடைசியில் [.] இக்குறி இடுக. கேள்விகளுக்கு [?] இக்குறி இடுக. ஆச்சரியம் காட்டும் வாக்கியங்களுக்கு

**[!] இக்குறி இடுக. மொழிகளுக்கு இடையில் | கோடு இடுக. இடம் விட்டுச் சரியாகத் தனியே எழுதியும் காட்டு.**

1. பசுபால்கொடுக்கும்
2. தையற்காரன்சொக்காய்தைத்தான்
3. இரவில்சூரியன்காய்வானு
4. ஆஹாபட்சிஎன்னஅழகாய்ப்பாடுகிறது
5. தட்டான்நகைசெய்தான்
6. கோவிந்தன்எப்பொழுதுவந்தான்
7. குதிரைஎவ்வளவுவேகமாய்ஓடுகிறது
8. அசோகர்புத்தமதத்தைப்பரவச்செய்தார்
9. அம்மம்மகாற்றின்சக்தியைஅளவிடமுடியுமா
10. எரிமலைகள்எங்குஅதிகம்உள்ளன
11. அலெக்ஸாந்தர்ஏன்இந்தியாவுக்குவந்தார்
12. எட்டுவயதுபையனுஎட்டாவதுபடிக்கிறான்
13. ஹிமயமலையில்பனிஉறைந்துகிடக்கும்
14. கோவிந்தன்கூடலூர்சென்றான்
15. மணிக்குநூறுமைல்செல்லும்வண்டியும்உண்டு
16. பிரயாணிவழிதெரியாமல்தவித்தான்
17. கூடையில்எத்தனைபழங்கள்இருக்கின்றன
18. சிறியகுழந்தைபேசுகிறதே
19. கண்ணன்மதுரைக்குச்சென்றான்
20. கண்ணன்மதுரைக்குச்சென்றானு

**6. அடியில்கண்ட கதையில் முற்றுப்புள்ளி, கேள்விகக் குறி, ஆச்சரியக் குறி, உதட்டுக் குறிகள் இடுக.**

ஒரு புத்திசாலிப் பையன் கடைக்குப்போய் உப்புபடி என்ன விலை என்றான் கடைக்காரன் இரண்டணு என்றான்

பையன் ஒருபடி உப்பு வாங்கினன் கடைக்காரன் ஒரு படிக்குக் குறைவாகக் கொடுத்தான் பையன் ஏன் உப்பை ஒருபடி அளவுக்குக் குறைவாகக் கொடுக்கிறுய் என்ருன் கடைக்காரன் எடுத்துபோகச் சுலபமாக இருக்கும்என்ருன் பையன் ஒன்றரையணு கடைக்காரனிடம் கொடுத்தான் கடைக்காரன் ஏன் பணம் குறைவாகக்கொடுத்தாய் என்று பையனைக் கேட்டான் பையன் எண்ணச் சுலபமாக இருக் குமே என்று பதில் சொன்னன் கடைக்காரன் சபாஷ் நீ மிகவும் கெட்டிகாரப் பையன் என்ருன் உண்மையில் அவன் கெட்டிக்காரன் தாஞ

**7. கோடிட்ட இடங்களில் மொழிகளை அமைக்க:**

1. கடைக்குப் போன பையன் ——— உள்ளவன்.
2. அவன் உப்பு ——— கடைக்குப் போனன்.
3. கடைக்காரன் ——— ஏமாற்றப் பார்த்தான்.
4. அவன் ——— உப்பைச் சரியாகத் தரவில்லை.
5. பையன் சொன்ன ——— சரியாகத் தரவில்லை.
6. பணம் குறைவாய் இருந்தால் எண்ணுவது——— இராது என்ருன்.
7. கடைக்காரன் ——— அடைந்தான்.

**8. ஏற்ற எதிர்மொழிகளைத் தேர்ந்து உபயோகிக்க:**

1. புத்திசாலிப் பையன் சாதுரியமாய்ப் பதில் சொல்வான். (துஷ்டன், அறிவிலி, சோம்பேறி) மடத்தனமாய் பதில் சொல்வான்.

2. பையன் உப்பை விலைக்கு வாங்கினான்; கடைக்காரன் உப்பை (அள்ளினான், கொடுத்தான், விற்றான்.)

3. கடைக்காரன் குறைவாகக் கொடுத்தான்; பையன் (நிறைய, அதிகமாக, சரசமாக)க் கேட்டான்.

4. கொஞ்சம் உப்பு எடுத்துப்போவது எளிது; அதிக உப்பு எடுத்துப் போவது (வலிவு, கெடுதி, சிரமம்).

**9. அடைப்புக் குறிகளின் மத்தியிலுள்ள மொழிகளில் சரியானவற்றை உபயோகிக்க :**

1. தனவந்தன் உடைகளை (பூண்டான், தரித்தான், கவிழ்த்தான்.)
2. திருடர் அவனை (வணங்கினர், வரவேற்றனர், வழி மறித்தனர்.)
3. குடியானவன் (கள்வரை, நண்பரை, விருந்தினரை) விரட்டினான்.
4. தனவந்தன் குடியானவனுக்கு (பிச்சை, வெகுமதி, காணிக்கை) கொடுத்தான்.

**10. கீழ்க் கண்ட வற்றைப் பற்றிச் சில வாக்கியங்களை நீங்களாக யோசித்துக் கூறுக :**

1. மழை பெய்தபொழுது குரங்குகள் என்ன பேசிக் கொண்டன?
2. குரங்குகளைப் பார்த்தபொழுது தூக்கணங் குருவிகள் தமக்குள் என்ன பேசின?
3. குருவிகள் குரங்குகளுக்குப் புத்தி சொன்னபோது குரங்குகள் என்ன சொல்லின?
4. குரங்குகள் கூண்டுகளைப் பிய்த்துவிட்ட பிறகு குருவிகள் தமக்குள் என்ன யோசித்தன?
5. அவை அதன் பிறகு என்ன செய்தன?



| | | |
|---|---|---|
| குரல் | கொத்தி | வளைந்து வளைந்து |
| பருந்து | வாத்தின் | நீர்நிலையில் |
| அழகாக | அலகு | நாரினல் |
| நெருப்புக்கோழி | புழு பூச்சி | கழுத்து |
| குஞ்சு | மரங்கொத்தி | வாயில் |

**11. மேலேயுள்ள மொழிகளைக் கீழ்க்கண்ட வாக்கியங்களில் பொருத்தமாக அமைக்க:**

1. குயில் ——— கூவும்.
   அதற்குக் ——— பொரிக்கத் தெரியாது.
2. ———விரல்களுக்கு இடையில் தோல் உண்டு.
   அது தண்ணீரில் ——— பிடித்துத் தின்னும்.
3. ——— மரப்பொந்தில் வசிக்கும்.
   அது மரப்பட்டையை ——— இரை தேடும்.
4. கருடன் ——— இனத்தைச் சேர்ந்தது.
   அதன் ——— வெண்ணிறமானது.

5. மயில் ——— விரித்து ஆடும்.
அதன் ——— இனிமை அல்ல.

6. கொக்கு ——— வசிக்கும்.
அதன் ——— செம்மை நிறம்.

7. தூக்கணங் குருவி ——— கூண்டு கட்டும்.
கூண்டின் ——— அடியில் இருக்கும்.

8. ——— பாலைவனத்தில் வசிக்கும்.
அது ——— ——— ஓடும்.

## VI. வாக்கியப் பிழைகளும், திருத்தமும்

**1. வாக்கியங்களைச் சரியாக முடிக்க:**

1. மைதானத்தில் ஆடுகள் மேய்ந்த...
2. குரங்குகள் மரங்களின் மேல் தாவுகின்ற...
3. மாடு தண்ணீர் குடித்த...
4. பாம்பு ஊர்ந்து செல்கின்ற......
5. கீரிகள் புதருக்குள் ஓடி......
6. பூரான் செடிக்கு ஓடி......
7. காற்று வேகமாக வீசி......
8. மோட்டார் வண்டி வேகமாக ஓடுகின்ற...
9. பறவைகள் ஆகாயத்தில் பறக்கின்ற...
10. பழங்கள் மரங்களிலிருந்து விழுந்த...
11. வாழை மரத்தில் காய்கள் காய்த்த...
12. விடியற்காலையில் சேவல் கூவி......
13. மாலை வேளையில் மயில் ஆடி......

**2. கோடிட்ட இடங்களைச் சரியானபடி பூர்த்தி செய்க :**

1. அதோ இராமன் வரு ______
   அவன் நேற்று ஊருக்குப் போ ______
2. ஆடி மாதம் நல்ல மழை பெய் ______
   அதனால் இப்பொழுது நல்ல விளைவு இரு ______
3. அண்ணன் சாப்பிட்டால் தம்பியும் சாப் ______
   அண்ணன் விளையாடினால் தம்பியும் ______
4. இன்று காலையில் வண்டி வ ______
   அதிலிருந்து மூன்று பேர் இற ______
5. நாங்கள் படுத்து நன்றாக ______
   திருடன் வீட்டுக்குள் புகு ______
6. நேற்று குருடன் பிச்சை கே ______
   நல்ல பையன் பிச்சை கொடு ______
7. அதோ ஒரு ஸ்திரீ அரிசி வாங் ______
   அவள் அதைச் சமை ______
8. என் பாட்டன் ஒரு மாஞ்செடி ந ______
   அது இப்பொழுது பழம் த ______
9. ஆரியர் இந்தியாவில் குடி யே ______
   அவர்களுடைய சந்ததியார் இன்றும் வட இந்தியாவில் வாழ் ______
10. சுந்தரம் இப்பொழுது வரவுக்கு மிஞ்சிச் செலவு செய் ______
    அவன் பிற்காலத்தில் கஷ்டப் படு ______

13/159

## 3. இக்கதையை நிகழ்காலத்தில் சொல் :

இரண்டுபேர் ஒரு மரத்திம்மையைப் பாதித் தூரம் இரண்டாக அறுத்தார்கள். அதன் மத்தியில் ஒரு முளையை வைத்துவிட்டுச் சாப்பிடப் போனார்கள். ஒரு குரங்கு



வந்தது. அது மரத்திம்மையின்மேல் ஏறிற்று. முளையைக் கொஞ்சங் கொஞ்சமாக ஆட்டிற்று. திடீரென்று முளை வந்துவிட்டது. அதன் உடல் பிளவில் அகப்பட்டுக் கொண்டது. அது அப்படியே இறந்தது.

## 4. இக் கதையை எதிர் காலத்தில் சொல் :

இராமன் எலிப்போனை நன்றாகக் கழுவினான். அதனுள் உள்ள கொக்கியில் ஒரு வெங்காயம் கோத்தான். எலிப்போனைக் கடைக்கு எடுத்துப் போனான். அதை அவன் எலி வளைக்கு அருகில் வைத்துவிட்டான். கொஞ்ச நேரம் கழித்து ஓர் எலி அங்கு வந்தது. அது போனில் வெங்காயத்தைப் பார்த்து, அதைத் தின்ன ஆசை கொண்

டது. எலி, போனைச் சுற்றி வந்தது. அதன்வாய்ப் புறத்தில் கால்களை வைத்தது; உடனே கதவு அழுந்திற்று. எலி



சட்டென்று போனில் விழுந்தது. அப்பொழுதே கதவு மூடிக்கொண்டது. எலி போனில் அகப்பட்டுக்கொண்டது.

**5. கோடிட்ட மொழிகள் பதில் வரும்படி கேள்விகளைக் கேட்க:**

**6. இக்கேள்விகளுக்குப் பதில் சொல்க:**

1. இராமன் எலிப்போனை ஏன் கழுவினான்?
2. வெங்காயம் கிடைத்து இராவிட்டால் இராமன் வேறு எதைப் போனில் வைத்து இருப்பான்?
3. எலிப்போனை வைக்க வேண்டுமென்ற எண்ணம் இராமனுக்கு ஏன் தோன்றிற்று?
4. இராமன் போனை வைக்குமுன் என்னவென்று யோசனை செய்து இருப்பான்?
5. எலியை ஒழிக்கும் வேறொரு கருவியை (கத்தரி) விளக்கு. அதில் எலி எப்படி அகப்படுகிறது என்று விவரி.
6. இராமன் போனில் விழுந்த எலியை என்ன செய்திருப்பான்? மூன்றுவித முடிவுகளைக் கூறுக.

## VII. வல்லெழுத்து மிகும் இடங்கள், மிகா இடங்கள்

**1. அடியிற் கண்ட சொற்றொடர்களைக் கவனி :**

1. அந்த + கம்பம் = அந்தக் கம்பம்.
2. இந்த + சங்கு = இந்தச் சங்கு.
3. எந்த + தட்டு = எந்தத் தட்டு.
4. எந்த + வண்டி = எந்த வண்டி.
5. அந்த + பலகை = அந்தப் பலகை.
6. இந்த + நாய் = இந்த நாய்.

அந்த, இந்த, எந்த என்னும் சொற்களுடன் க, ச, த, ப என்னும் உயிர் மெய் யெழுத்துக்களை முதலில் கொண்ட சொற்கள் வந்து புணரும்போது க, ச, த, ப மிகுகின்றன. அதாவது அந்த உயிர் மெய்யெழுத்துக்களின் மெய்யெழுத்துக்களாகிய க், ச், த், ப் அதிகமாகத் தோன்றுகின்றன. அவற்றின் இனத்தைச் சேர்ந்த மற்ற உயிர் மெய்யெழுத்துக்களாகிய கி, சி, தி, பி முதலிய வந்தாலும் அப்படியே மிகும்.

[கீழ்வரும் அப்பியாஸங்களில் க, ச, த, ப என்றால் அவைகளின் இனத்தைச் சேர்ந்த மற்ற உயிர்கள் ஏறிய உயிர் மெய் யெழுத்துக்களையும் கொள்க.]

**2. அடியிற் கண்ட சொற்கள் கூடுமிடத்து க, ச, த, ப எங்கு மிகும்? எங்கு மிகா? ஏன்?**

1. அந்த + யானை.
2. இந்த + பலாக்காய்.
3. எந்த + சாவடி
4. இந்த + நாகம்.
5. அந்த + வண்டி.
6. எந்த + தடாகம்.
7. இந்த + வாழைமரம்.
8. அந்த + கிழவன்.

9. எந்த + மாடு.
10. அந்த + வாகனம்.
11. அந்த + காப்பு.
12. அந்த + விசிறி.
13. இந்த + தூண்.
14. எந்த + பையன்.
15. அந்த + முறம்.
16. இந்த + செட்டி.
17. எந்த + நெல்.
18. இந்த + சீப்பு.
19. அந்த + மேகம்.
20. எந்த + தெரு.

**3. அடியிற் கண்ட சொற்களின் புணர்ச்சிகளைக் கவனி:**

1. அவனை + கொன்றான் = { அவனைக் கொன்றான்
2. குட்டியை + வாங்கினேன் = { குட்டியை வாங்கினேன்
3. நாயை + சுட்டான் = { நாயைச் சுட்டான்
4. வண்டியை + மாற்றினேன் = { வண்டியை மாற்றினேன்
5. பன்றியை + துரத்திற்று = { பன்றியைத் துரத்திற்று
6. யானையை + பார்த்தேன் = { யானையைப் பார்த்தேன்

'ஐ' என்னும் இடைச்சொல்லைக் கடைசியிலுடைய சொற்களுடன் க, ச, த, ப என்னும் உயிர் மெய்யெழுத்துக்களை முதலில் உடைய சொற்கள் வந்து புணரும்போது க, ச, த, ப மிகுகின்றன.

**4. அடியிற் கண்ட சொற்கள் கூடும்போது எங்கு மிகும்? எங்கு மிகா? ஏன்?**

1. கந்தனை + கொல்.
2. நாயை + பார்.

3. இலையைப் + தைத்தான்.
4. மரத்தை + வெட்டினான்
5. குடையை + பிடிக்கிறான்.
6. தோசையை + சுட்டாள்.
7. செடியை + நடுகிறான்.
8. பாயை + முடைகிறான்.
9. அணையை + கட்டுவார்கள்.
10. வீட்டை + கட்டு.
11. கோழியை + விற்றான்.
12. பழத்தை + தின்றேன்.
13. அரணை + பூசித்தான்.
14. வெண்ணெயை + காய்ச்சு.
15. பாயை + நெய்தான்.
16. பறவையை + பிடித்தோம்.
17. ஆட்டை + துரத்து.
18. திருடனை + தண்டித்தான்.
19. நரியை + நோக்கினான்.
20. சேவகனை + கூப்பிடு.

**5. அடியிற் கண்ட சொற்களின் புணர்ச்சிகளைக் கவனி :**

1. எனக்கு + கொடுத்தான் = எனக்குக் கொடுத்தான்.
2. யானைக்கு + சாத்தினான் = யானைக்குச் சாத்தினான்.
3. கூலிக்கு + வேலை = கூலிக்கு வேலை.
4. பாம்புக்கு + பகை = பாம்புக்குப் பகை.
5. அரசனுக்கு + மகன் = அரசனுக்கு மகன்.
6. வேலனுக்கு + தருகிறான். = வேலனுக்குத் தருகிறான்.

'கு' என்னும் இடைச்சொல்லைக் கடைசியிலுடைய சொற்களுடன் க, ச, த, ப என்னும் உயிர் மெய் யெழுத்

துக்களை முதலில் உடைய சொற்கள் வந்து புணரும் போது க, ச, த, ப மிகுகின்றன.

**6. அடியிற் கண்ட சொற்கள் கூடும்போது எங்கு மிகும்? எங்கு மிகா? ஏன்?**

1. குள்ளனுக்கு + கொடு.
2. மாட்டுக்கு + தந்தான்.
3. வேலனுக்கு + சந்தனம் கொடு.
4. பெண்ணுக்கு + நகை போடு.
5. வீட்டுக்கு + வெள்ளை அடி.
6. காட்டுக்கு + போகிறான்.
7. கேள்விக்கு + பதில்.
8. ஆட்டுக்கு + கால்கள் நான்கு
9. இராமனுக்கு + சாதம் போடு.
10. குழந்தைக்கு + காட்டு
11. மலைக்கு + வா.
12. பூனைக்கு + கண்கள் இரண்டு.
13. புற்றுக்கு + பாம்பு ஓடிற்று.
14. சாப்பாட்டுக்கு + கஷ்டம்.
15. செலவுக்கு + பணம்.
16. கந்தனுக்கு + விற்றான்.
17. பத்துமணிக்கு + தூங்கு.
18. நான்குமணிக்கு + விழி.
19. கந்தனுக்கு + நேசன்.
20. குள்ளனுக்கு + தகப்பன்.

**7. அடியிற் கண்ட சொற்களின் புணர்ச்சிகளைக் கவனி:**

1. தேடி + போனோம் = தேடிப் போனோம்.
2. ஆடி + வந்தான் = ஆடி வந்தான்.

3. சாப்பிட + சொன்னான். = சாப்பிடச்சொன்னான்.
4. அழுத்தி + மொண்டான் = அழுத்திமொண்டான்.
5. படுத்து + தூங்கினான் = படுத்துத் தூங்கினான்.
6. பார்த்து + கூவினான் = பார்த்துக் கூவினான்.

வினையெச்சங்களுடன் க, ச, த, ப என்னும் உயிர் மெய் யெழுத்துக்களை முதலில் உடைய சொற்கள் வந்து புணரும்போது க, ச, த, ப மிகுகின்றன. (வினையெச்சத்தின் கடைசியில் 'ண்டு', 'ந்து', 'ன்று', 'ய்து' என்னும் அசை வந்தால் க, ச, த, ப மிகா.)

**8. அடியிற் கண்ட சொற்கள் புணரும் போது எங்கு மிகும்? எங்கு மிகா? ஏன்?**

1. நோக்கி + வீசினான்.
2. பார்த்து + படி.
3. விட்டு + சென்றான்.
4. கட்டி + முடித்தாய்
5. வார்த்து + கொடுத்தான்.
6. பிடுங்கி + நட்டான்.
7. நட்டு + வைத்தான்.
8. கடித்து + தின்றான்.
9. வந்து + பார்த்தேன்.
10. உருட்டி + திரட்டினோம்.
11. ஒடிந்து + போயிற்று.
12. சேர்த்து + கொடு.
13. செய்து + தின்றான்.
14. கூப்பிட + போனான்.
15. ஏறி + குதித்தான்.
16. கண்டு + பேசினான்.
17. படுத்து + தூங்கு.

18. திறந்து + பார்த்தான்.
19. சுட்டு + கொன்ருன்.
20. மென்று + தின்.

**9. அடியிற் கண்ட பெயர்ச் சொற்களின் புணர்ச்சிகளைக் கவனி :**

1. நாய் + கால் = நாய்க்கால்.
2. பாய் + மரம் = பாய்மரம்.
3. தேர் + தட்டு = தேர்த்தட்டு.
4. கூழ் + சட்டி = கூழ்ச்சட்டி.
5. ஊழ் + வினை = ஊழ்வினை.
6. பேய் + புடலை = பேய்ப்புடலை.

ய், ர், ழ் என்னும் எழுத்துக்களைக் கடைசியில் உடைய பெயர்ச்சொற்களுடன் க, ச, த, ப என்னும் உயிர் மெய்யெழுத்துக்களை முதலில் கொண்ட பெயர்ச் சொற்கள் வந்து புணரும்போது க, ச, த, ப மிகுகின்றன.

**10. அடியிற் கண்ட பெயர்ச் சொற்கள் எங்ஙனம் புணரும்? விதியும் கூறுக :**

1. தாய் + பால்.
2. நாய் + வால்.
3. ஏர் + கால்.
4. பெயர் + சொல்.
5. தயிர் + பானை.
6. வாய் + சொல்.
7. வேர் + கடலை.
8. கூழ் + சாலை.
9. பேய் + சுரைக்காய்.
10. போர் + களம்.
11. நேர் + கோடு.
12. ஊழ் + பயன்.
13. தேர் + கால்.
14. பொய் + மொழி.
15. பொய் + சொல்.
16. தமிழ் + தெய்வம்.
17. வாய் + புண்.
18. தமிழ் + வருஷம்.
19. சீழ் + தலை.
20. தயிர் + சாதம்.

**11. அடியிற் கண்ட பெயர்ச் சொற்களின் புணர்ச்சிகளைக் கவனி :**

1. புறு + கூடு = புறுக் கூடு.
2. பட்டி + நாய் = பட்டி நாய்.
3. ஆடி + திங்கள் = ஆடித் திங்கள்.
4. அச்சு + கூடம் = அச்சுக் கூடம்.
5. பேச்சு + வார்த்தை = பேச்சு வார்த்தை.
6. கை + குட்டை = கைக் குட்டை.

ஆ, இ, உ, ஐ என்னும் உயிரெழுத்துக்களைக் கடைசியிலுடைய பெயர்ச்சொற்களோடு க, ச, த, ப என்னும் உயிர் மெய் யெழுத்துக்களை முதலில் கொண்ட பெயர்ச் சொற்கள் வந்து புணரும்போது க, ச, த, ப மிகுகின்றன.

**12. அடியிற் கண்ட பெயர்ச் சொற்கள் எங்ஙனம் புணரும்? விதியும் கூறுக :**

| | |
|---|---|
| 1. முன்பனி + காலம். | 11. காட்டு + பூனை. |
| 2. தனி + வட்டி. | 12. கிளி + சிறகு. |
| 3. அவரை + கொடி. | 13. யானை + தோல். |
| 4. நரி + வால். | 14. நா + பறை. |
| 5. புலி + பால். | 15. கடலை + காய். |
| 6. புழு + முட்டை. | 16. தனி + பா. |
| 7. முத்து + பல். | 17. வாழை + மரம். |
| 8. நிலா + சோறு. | 18. வாழை + செடி. |
| 9. புளி + நாற்றம். | 19. முந்திரி + கொட்டை. |
| 10. பூனை + தலை. | 20. கோழி + முட்டை. |

**13. கீழ்க் கண்ட சொற்களைப் புணர்த்தி எழுதுக. விதியையும் கூறுக :**

1. நாயை + கொல்.
2. உப்பு + பயிர்.
3. மானை + விடு.
4. தேர் + தட்டு.
5. ஒட்டை + பானை.
6. வெள்ளி + கிண்ணம்.
7. கதையை + கேள்.
8. பத்து + பாட்டு.
9. தாய் + பசு.
10. குதிரைக்கு + கொடு.
11. அந்த + பெண்.
12. பார்த்து + பேசினான்.
13. வெள்ளை + பூ.
14. கந்தனுக்கு + தகப்பன்.
15. பாக்கு + தூள்.
16. கத்தியை + காட்டு.
17. சுந்தரனுக்கு + கொடு.
18. குடிக்க + போனான்.
19. தை + திங்கள்.
20. பாளையை + மிதித்தான்.

**14. உன் வாசக புத்தகத்தில் மிகுந்திருக்கும் க, ச, த, பக்களுள் சிலவற்றிற்கு விதிகள் கூறுக.**

**15. அடியிற் கண்ட புணர்ச்சிகளைக் கவனி :**

1. வந்த + பையன் : வந்த பையன்.
2. படித்த + பாடம் : படித்த பாடம்.

3. தைத்த + சட்டை : தைத்த சட்டை.
4. அழுத + தங்கை : அழுத தங்கை.

பெயரெச்சத்துடன் க, ச, த, ப என்னும் உயிர்மெய்யெழுத்துக்களை முதலில் கொண்ட பெயர்ச்சொற்கள் வந்து புணரும்போது க, ச, த, ப மிகா.

**16. அடியிற் கண்ட சொற்கள் புணரும்போது எங்கு மிகும்? எங்கு மிகாது? ஏன்?**

1. கவனித்து + படி.
2. இடிந்த + சுவர்.
3. எழுதிய + பாட்டு.
4. நிரம்பிய + தடாகம்.
5. கடித்து + தின்.
6. வாங்கிய + கவளம்.
7. துரத்தின + சேனை.
8. உடைத்து + கொடு.
9. இறந்த + சிறுத்தை.
10. பறந்த + பட்சி.

**17. அடியிற் கண்ட புணர்ச்சிகளைக் கவனி :**

1. மலர் + கொய்தான்.
2. துணி + தைத்தான்.
3. குடை + பிடிக்கிறான்.
4. கட்டை + சீவுகிறான்.

இரண்டாம் வேற்றுமைப் பெயரின் கடைசியில் வேற்றுமையுருபாகிய 'ஐ' மறைந்து இருந்தால் க, ச, த, ப மிகா.

**18. அடியிற் கண்ட புணர்ச்சிகளைக் கவனி :**

1. அவனுடைய + மனை.
2. நாயினுடைய + கால்.

3. பெண்ணினுடைய + தவலை
4. குடியானவனுடைய + சால்

ஆறும் வேற்றுமைப் பெயர்களின் பின் க, ச, த, ப மிகா.

**19. அடியிற் கண்ட சொற்கள் புணரும் போது எங்கு மிகும்? எங்கு மிகாது? ஏன்?**

1. நாயை + துரத்து.
2. நாயினுடைய + காது.
3. ஜம்னுவுக்கு + கொடு.
4. சங்கரனுடைய + சட்டை.
5. மரத்தினுடைய + கிளை.
6. மரத்தை + பிள.
7. கோபாலனுக்கு + சொந்தம்.
8. கோபாலனுடைய + கண்.
9. அவனுடைய + பை,

**20. அடியிற் கண்ட புணர்ச்சிகளைக் கவனி:**

1. தம்பி + போ.
2, அம்மா + கொடு.
3. முருகா + சொல்.
4. மகனே + திரும்பு.

எட்டாம் வேற்றுமைப் பெயர்களின் பின் க, ச, த, ப மிகா.

**21. அடியிற் கண்ட சொற்கள் புணரு' போது எங்கு மிகும்? எங்கு மிகாது? ஏன்?**

1. தந்தாய் + சொல்வீர்.
2. கந்தா + தூங்கு.
3. மகளே + பார்.
4. துரையே + துப்பாக்கியால் சுடு.

5. அன்னாய் + பால் கொடு.
6. அண்ணா + பெட்டி எங்கே.
7. தங்காய் + சேலை அணி.
8. பிள்ளாய் + குதிரை ஏறு.
9. மாமா + சிரி.
10. தாதா + தட்டு கொடு.

## VIII. வாக்கிய மாற்றம் - II.

**1. அடியிற் கண்ட வாக்கியங்களைத் தனித் தனி சிறு வாக்கியத் தொகுதிகளாக்குக.**

(உ - ம்.)

வர்த்தகன் வளர்த்த பெரிய நாய், குடிசையில் வசிக்கும் ஒரு வயது சென்ற கிழவியைத் துரத்திக் காலின் கண் கடித்தது.

### வாக்கியத் தொகுதி

1, வர்த்தகன் பெரிய நாய் வளர்த்தான்.
2. குடிசையில் ஒரு கிழவி வசித்தாள்.
3. அவள் வயது சென்றவள்.
4. நாய் அவளைத் துரத்திற்று.
5. அது அவளைக் காலின்கண் கடித்தது.

1. தனவந்தன் ஒரு காட்டின் வழியே போகும் போது, அவனைச் சில திருடர் அடித்து, அவனுடைய பணப்பையைப் பிடுங்கிக் கொண்டார்கள்.

2. விடாமழை பெய்ததனால், சில குரங்குகள், பறவைகள் கூடுகட்டி வாசம் செய்யும் ஒரு மரத்தின் கீழ் வந்து தங்கின.

3. ஓர் அடர்ந்த காட்டில் வானளாவிய ஒரு மரத்தின்கீழ் ஒரு புற்றில் ஒரு நல்ல பாம்பு வசித்து வந்தது.

4. ஆற்று நிறைய வெள்ளம் வர, மனிதர்களினால் ஆற்றைக் கடக்க முடியாததனால், அங்கு வாழும் சில செம்படவர் தம் படகை ஆற்றில் செலுத்தினார்கள்.

5. அரசனின் இரு குழந்தைகளையும், சேவகர்கள் ஒரு கானகத்தில் கொண்டுபோய் விட்டுவிட, அவர்கள் பசியால் வருந்திக் குளிரினால் பரிதவித்து, இறந்துவிட்டனர்.

6. 'மொகலாயரின் ஆட்சியில் அக்பர் ஆட்சியே மேலானது' என்று நீங்கள் தேச சரித்திரத்தில் படித்திருக்கிறீர்கள்.

7. பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

8. ஆடு மாடுகளை மேய்த்துக்கொண்டு வடமேற்குக் கணவாய்களின் மூலமாய் வந்த ஆரியர் ஸிந்து கங்கா சமவெளி முழுதும் பரவினர்.

9. சூரிய வெப்பத்தினால் பூமியில் உள்ள தண்ணீர் ஆவியாக மாறி மேலே செல்ல, அங்குக் குளிர் காற்று பட்டவுடன், மறுபடியும் தண்ணீராக மாறி மழையாகப் பெய்கிறது.

10. வண்ணான் துணிகளைத் தோய்த்து அவன் மனைவியிடம் கொடுக்க, அவள் அவற்றை வாங்கி உலரவைத்தாள்.

11. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் 'தன் மகன் சான்றோன்' எனக் கேட்ட தாய்.

13. நீங்கள் சுண்ணாம்பு போன்ற சரக்குகளைப் பரீட்சைக்கு அனுப்புவதானால், அவற்றைக் காற்று உள் போகாதபடி தகரப் பெட்டியில் நன்றாய் அடைத்து அனுப்ப வேண்டும்.

12. ஆகிலும் நான் அப்படிச் செய்யாமல், அந்த மனிதன் திரும்பி வந்து கேட்டவுடனே, பணத்தைக் கொடுத்து விட்டேன்.

14. பின்பு பேபர், ஹுமாயூன் படுக்கைக்குப் பக்கத்தில் முழங்கால் படியிட்டுக் கடவுள் தம்மை எடுத்துக் கொண்டு மகனைக் காப்பாற்ற வேண்டும் என்று மிகுந்த ஊக்கத்தோடே துதி செய்தார்.

15. குடத்தைச் சாய்க்கும் பொழுது, குடத்திற் குள்ளிருக்கும் காற்று முன்போல் அவ்வளவு பலமாய் ஜலத்தை எதிர்க்க முடியாது.

16. நாம் சம்பாதிக்கும் பணத்தைக் காப்பாற்றி வைத்துக்கொள்வதற்குத் தபால் ஆபீஸில் சேவிங்ஸ் பாங்கி ஏற்பட்டிருக்கிறது.

17. சிலநாள் சென்றபின், அவன் தனக்குக் கிடைத்த பணத்தை எல்லாம் எடுத்துக்கொண்டு ஒரு தூரமான தேசத்துக்குப்போய், அங்கே குடிக்காரரோடும், சோம்பேறிகளோடும் சேர்ந்து, தன் சொத்து முழுதும் அழித்துவிட்டான்.

18. விகார ரூபமாய்க் காணப்படும் புழு வடிவமாகிய பட்டுப் பூச்சியிலிருந்து, அரசரும் ஆசைப்படும் அழகான பட்டு உற்பத்தியாகிறது.

19. பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ் பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்து, நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.

20. 'செய்வன திருந்தச் செய்' என்று ஔவை அருளிச் செய்தார்.

**2. உன் புத்தகத்திலுள்ள சில வாக்கியங்களைத் தனித்தனி சிறு வாக்கியத் தொகுதிகளாக்குக.**

**3. அடியிற் கண்ட பாக்களைத் தனித்தனி சிறு வாக்கியத் தொகுதிகளாக்குக :**

1. அடக்கம் உடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா ;— மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு.

2. சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் ; — மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் (கண்டீர்) மரம்.

3. உற்ற இடத்தில் உயிர் வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ ? — கற்றூண்
பிளந்திறுவதல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.

4. தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர் ; — திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று.

5. இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே ! — பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர் வரவால் பொங்குங் கடல்.

**4. உன் செய்யுட் பாடத்தில் வந்துள்ள சில பாக்களைத் தனித்தனி சிறு வாக்கியத் தொகுதிகளாக்குக.**

## IX. கட்டுரை

**1. உபாத்தியாயர் உங்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு சீட்டு கொடுத்திருக்கிறார். அதில் நீ பேசவேண்டிய விஷயத்தின் தலைப்பு எழுதப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்காமல் வை. உபாத்தியாயர் பேசச் சொல்லும்போது பார்த்து உடனே அதிலுள்ள தலைப்பைப் பற்றிச் சில வாக்கியங்கள் சொல்க.**

### 2. அனுபவங்கள்

**கீழ் கண்டவற்றைப்பற்றி எழுதுக. இக் குறிப்புகளை உபயோகிக்க.**

### I

குறிப்புகள் : சந்தர்ப்பம்; விவரம்; முடிவு.

1. உனக்கு மிகவும் சந்தோஷம் கொடுத்த நிகழ்ச்சி.
2. உனக்கு மிகவும் கோபம் கொடுத்த நிகழ்ச்சி.
3. உனக்கு மிகவும் வருத்தம் கொடுத்த நிகழ்ச்சி.
4. நீ கண்ட கனவுகளில் அதிசயமானது அல்லது வேறு உணர்ச்சி தந்தது.
5. கனத்த காற்று மழை.
6. உனக்குத் தெரிந்த ஒரு களவு.
7. நீ கேட்ட ஒரு சொற்பொழிவு.

### II

குறிப்புகள் : சந்தர்ப்பம் ; வந்திருந்தவர்கள் ; நிகழ்ச்சிகள் ; முடிவு.

8. ஒரு கலியாணம்.
9. ஒரு திருவிழா.
10. கழைக்கூத்தன் வித்தை.

## III

**குறிப்புகள் :** சந்தர்ப்பம் ; உடன் வந்தவர் ; பார்த்தவை ; செய்தவை ; முடிவு.

11. நீ சென்ற ஊர்.
12. ஆற்று வெள்ளம்.
13. புகைவண்டிப் பிரயாணம்.
14. பஸ் பிரயாணம்.

## ஆட்களை வர்ணித்தல்

**குறிப்புகள் :** உடை ; செய்யும்வேலை ; நன்மை ; தீமை.

1. தபால்காரன்.
2. போலீஸ்காரன்.
3. குறம் சொல்பவள்.
4. குடுகுடுப்பைக்காரன்.
5. இடையன்.
6. விறகு வெட்டி.
7. உழவன்.
8. தச்சன்.

## உன் விருப்பங்கள்

1. உனக்கு லக்ஷம் ரூபாய் கிடைத்தால் என்ன செய்வாய் ?
2. பறந்து போகும் கம்பளம் கிடைத்தால் எங்கெங்குப் போவாய் ? ஏன் ?
3. எது கேட்டாலும் கொடுக்கும் மோதிரம் கிடைத்தால் என்னென்ன கேட்பாய் ? ஏன் ?

## 3. செய்யும் விதம்

**விசிறி :**

ஒரு பனை ஓலைக் குருத்தை எடுத்துக்கொள்.
அதை அகலமாக விரி.
அதன்மேல் மணலைப் பரப்பு.
அது அகலமாகும்.
அதை இரண்டாகப் பிள.
காம்பைக் குட்டையாக வெட்டு.

ஓலையைக் காம்புடன் கட்டு.
ஓலையில் வட்டமாய்க் குறி.
அதை வட்டமாக வெட்டு.
இரண்டு தென்னங் குச்சிகளை எடுத்துக்கொள்.
அவற்றை வட்டமாக வளை.
ஓலையின் ஓரத்தில் தை.
இதுதான் விசிறி.

**கீழ்க்கண்டவை செய்யும் விதம் விவரிக்க. வேண்டுமிடத்துச் சித்திரமும் வரைந்து விளக்குக. அடைப்புக் குறிகளில் கொடுத்துள்ள மொழிகளை உபயோகிக்க.**

1. காற்றாடி.
   (கடிதம், குச்சு, பிசின், நூல்.)
2. குயவன் பானை செய்தல்.
   (சக்கரம், களிமண், சிறு பலகை)
3. வடை.
   (பருப்பு, கறிமசாலை, எண்ணெய்.)
4. சேணியன் துணி நெய்தல்.
   (நூல், பாவு, தறி, மிதி, நாடா.)
5. போலான பூமி உருண்டை செய்தல்.
   (கடிதக் குப்பை, புளியங்கொட்டை, தண்ணீர், பாத்திரம், நெருப்பு.)
6. மூங்கில் கூடை.
   (பச்சை மூங்கில், கத்தி.)

Printed at the Caxton Press, Madras,—1950.

131159.

2227

Caxton Press
MADRAS.